விலை: 50.00
பக்கங்கள் - 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378
Registered as a News Paper in Sri Lanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com
சங்கு 26
ஒலி 128 வள்ளுவர் ஆண்டு 2056 சித்திரை 13 சனிக்கிழமை (26.04.2025) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

IELTS
27.04.2025 - 2.00 pm
New Batch ஆரம்பம்
(Academic - General and Life Skill A1)
இத்துடன் Basic & Advance English Grammar Classes
2 Weeks Free of Charge
இல.53. சிவகுருநாதர் வீதி, Brown Rd, Jaffna.
By : B.Murali - 077 798 9830
(4030)

வவுனியாவில் விபத்து

## பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழப்பு

(வவுனியா)

வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் நேற்று வெள்ளிக் கிழமை இடம்பெற்ற விபத்தில் பொலிஸ் உத்தியோகத்தர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இதில் வவுனியா தலைமை பொலிஸ் நிலையத்தில் பணியாற்றும் லக்ஸ்மன் பண்டார என்ற பொலிஸ் உத்தியோகத்தரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

மோட்டார் சைக்கிளில்

02ஆம் பக்கம் பார்க்க

## கீரிமலை ஜனாதிபதி மாளிகையின் எதிர்காலப் பயன்பாடு குறித்து



### அமைச்சர்கள், துறைசார் அதிகாரிகள் கள ஆய்வு

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் கீரிமலையில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையை நேற்றைய தினம் அமைச்சர்கள் பார்வையிட்டனர்.

இந்தக் கட்டடத்தின் எதிர்கால

15ஆம் பக்கம் பார்க்க

யாழில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள

# காணிகள், கட்டடங்களை விடுவிக்க நடவடிக்கை

### அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவிப்பு

(யாழ்ப்பாணம்)

யாழில் உயர் பாதுகாப்பு வலயத்திலுள்ள காணிகள், கட்டடங்களை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும் என வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக தெரிவித்துள்ளார்.

(02ஆம் பக்கம் பார்க்க)



தருமபுரத்தில்

## 20 கிலோ கஞ்சாவுடன் பெண்ணொருவர் கைது

(கிளிநொச்சி)

தருமபுரம் பிரமந்தனாறு பகுதியில் 20 கிலோ கஞ்சாவுடன் பெண் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

கிடைக்கப் பெற்ற தகவலுக்கு அமைய வீடொன்றினைச் சோதனை செய்தபோது 20 கிலோ கஞ்சா மீட்கப்பட்டது.

15ஆம் பக்கம் பார்க்க

இந்தியப் பிரதமர் மோடியுடன்

## தொலைபேசியில் உரையாடிய அநுர

(கொழும்பு)

அண்மையில் இந்தியாவின் காஷ்மீரின் பஹல்காமில் இடம்பெற்ற பயங்கரவாதத் தாக்குதலை வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

இந்தியப் பிரதமர் நரேந்

15ஆம் பக்கம் பார்க்க

## கொள்ளையர்கள், கொலைகாரர்கள் பிடியில் சமூகம் சிக்கியுள்ளது

### எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

(கொழும்பு)

கொள்ளையர்கள், கொலைகாரர்கள் பிடியில் சமூகம் சிக்கியுள்ளது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

மாவத்தகம பிரதேசத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும்போதே எதிர்க்கட்சித் தலைவர் சஜித்

15ஆம் பக்கம் பார்க்க



## குற்ற விசாரணைப் பிரிவு யாழில் ஆரம்பிக்கப்பட்டது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணத்தில் நேற்று இணையக் குற்றவிசாரணைப் பிரிவு பதில் பொலிஸ்மா அதிபர் பிரியந்த வீரசூரியவால் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

வடக்கு மாகாணத்தில் இணையக் குற்றங்கள் தொடர்ச்சியாக அதிகரித்து

15ஆம் பக்கம் பார்க்க



## பாப்பரசரின் ஆராதனை இன்று

(வத்திக்கான்)

புனித பாப்பரசர் பிரான்ஸிஸின் இறுதிக் கிரியைகள் இன்று இடம்பெறவுள்ளது.

இலங்கை நேரப்படி பி.ப 1.30 மணிக்கு புனித பேதுரு பசிலிக்காவின் புனித பேதுரு

15ஆம் பக்கம் பார்க்க

சர்வதேச நாணய நிதியத்தின்

## 5ஆவது தவணைக் கடனை விடுவிக்க இணக்கப்பாடு

(கொழும்பு)

சர்வதேச நாணய நிதியத்தினால் இலங்கைக்கு வழங்கப்படும் நீடிக்கப்பட்ட கடன் வசதியின் 05ஆவது தவணையை விடுவிப்பதற்கு அதிகாரிகள் மட்ட இணக்கப்பாடு எட்டப்பட்டுள்ளது.

இதனடிப்படையில் இலங்கைக்கு 344 மில்லியன் அமெரிக்க டொலர் கடனுதவி கிடைக்கவுள்ளது.

தமது அதிகாரிகள் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்தபோது இலங்கை அதிகாரிகளுடன் நடத்திய பேச்சுவார்த்தை மற்றும் இலங்கை

15ஆம் பக்கம் பார்க்க

## ஜனாதிபதியின் வருகையை முன்னிட்டு ஆர்ப்பாட்டம்

### பொலிஸாரின் தடைக் கோரிக்கையை நிராகரித்த வவுனியா நீதிமன்றம்

(வவுனியா)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் வருகையை முன்னிட்டு ஆர்ப்பாட்டம் மேற்கொள்ள தடையுத்தரவு கோரிய வவுனியா பொலிஸாரின் கோரிக்கை வவுனியா நீதிமன்றத்தால் நிராகரிக்கப்பட்டுள்ளது.

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க இன்று மாலை 4 மணிக்கு வவுனியா நகர சபை மைதானத்திற்கு வருகை

15ஆம் பக்கம் பார்க்க

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரான்சிஸ் மறைவுக்கு பிரதமர் ஹரிணி இரங்கல்



(கொழும்பு)

பிரதமர் கலாநிதி ஹரிணி அமரசூரிய நேற்று (25) கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்திற்கு விஜயம் செய்து, பியூனஸ் அயர்ஸ் பேராயரும் ஆர்ஜென்டினாவின் பிராந்தியத் தலைவருமான புனித திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் மறைவுக்கு இலங்கை அரசாங்கத்தினதும் மக்களினதும் சார்பாக தனது இரங்கலைத் தெரிவித்தார்.

இதன்போது இரங்கல் புத்தகத்தில் கையொப்பமிட்டு, கத்தோலிக்க சமூகத்தின் ஆன்மீகத் தலைவரான திருத்தந்தையின் மறைவுக்கு இரங்கல் தெரிவித்த பிரதமர், இலங்கையிலும் உலகெங்கிலும் உள்ள கத்தோலிக்க சமூகத்திற்கு தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்தார்.

கொழும்பில் உள்ள வத்திக்கான் தூதரகத்தின் அப்போஸ்தலிக் பிரதிநிதி மற்றும் ஏனைய சிரேஷ்ட அதிகாரிகளும் இந்த நிகழ்வில் கலந்து கொண்டனர். (ம-4)

# நீதிமன்றத்தை அவமதித்த தேசபந்து தென்னகோன்

## சட்ட நடவடிக்கை எடுக்க உத்தரவு

பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னகோன் நீதிமன்றத்தை அவமதித்ததாக மாத்தறை நீதவான் நீதிமன்றம் தீர்மானித்துள்ளது.

மாத்தறை வெலிகம பிரதேசத்தில் இடம்பெற்ற துப்பாக்கிச்சூட்டுச் சம்பவம் தொடர்பில் கைது செய்யப் பட்டுக் கடந்த 10 ஆம் திகதி தேசபந்து தென்னகோன் பிணையில் விடுவிக்கப்பட்டார்.

இதன் போது நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட உத்தரவை மீறும் வகையில் தேசபந்து தென்னகோன் நீதிமன்ற வளாகத்திற்குள் தனது வாகனத்தைக் கொண்டு வந்துள்ளார்.

இதனால் தேசபந்து தென்னகோன் நீதிமன்றத்தை அவமதித்ததாக மாத்தறை நீதவான் தீர்மானித்துள்ளார்.

இது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்வதற்கு மாத்தறை நீதிமன்றத்திற்கு அதிகாரம் இல்லை எனச் சுட்டிக்காட்டிய மாத்தறை நீதவான் நீதிமன்றம், இந்த விவகாரத்தில் மேன்முறையீட்டு நீதிமன்றத்தில் தேசபந்து தென்னகோனுக்கு எதிராக மனுத்தாக்கல் செய்வதற்குச் சட்ட நடவடிக்கை எடுக்குமாறு சட்டமா அதிபருக்கு உத்தரவிட்டுள்ளது. (ம-4)

# தொழிலாளர்களுக்கான தேர்தல் விடுமுறை குறித்த அறிவிப்பு

(கொழும்பு)

தொழிலாளர் ஒருவர் வாக்களிப்பதற்காக விடுமுறை கோரினால், அது தொடர்பாக பணியமர்த்துபவர், தொழிலாளருக்கு போதுமானதாக கருதப்படும் குறைந்தபட்சம் இரண்டு மணி நேர பணி விடுமுறையை ஊதியத்துடன் வழங்க வேண்டும் என தேர்தல்கள் ஆணைக்குழு விசேட அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

வாக்களிப்பதற்காக அனைவருக்கும் அவர்களது நிறுவனங்கள் விடுமுறை வழங்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவ்வாறு வழங்கப்படும் விடுமுறை காலம், தற்காலிக தொழிலாளர்கள் உட்பட அனைத்து தொழிலாளர்களுக்கும் ஊதியத்துடன் கூடிய சிறப்பு விடுமுறையாக கருதப்பட வேண்டும் எனவும் இது தொழிலாளர்களின் வழக்கமான விடுமுறை உரிமைகளுக்கு வெளியில் இருக்க வேண்டும் எனவும் அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-4)

# கிளிநொச்சி சுண்டிக்குளத்தில் 108 கிலோ கஞ்சாவுடன் சந்தேகநபர் ஒருவர் கைது



கிளிநொச்சி - சுண்டிக்குளம் பகுதியில் 108 கிலோ கேரள கஞ்சாவுடன் சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் வியாழக்கிழமை (24) பொலிஸ் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பொலிஸ் விசேட அதிரடிப் படையினருக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் மேற்கொண்ட சுற்றிவளைப்பின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கிளிநொச்சி மணற்காடுப் பகுதியைச் சேர்ந்த 49 வயதுடையவர் ஆவார்.

சந்தேக நபரிடம் இருந்து 108 கிலோ கேரள கஞ்சா கைப்பற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ம-4)

# ஆபாச காணொளிகளை உருவாக்கிய நபர் கைது

சமூக ஊடகங்களில் இருந்து பெற்றுக்கொள்ளும் சிறுவர்களின் புகைப்படங்களை பயன்படுத்தி ஆபாச காணொளிகளை உருவாக்கியதாக கூறப்படும் சந்தேகநபரொருவர் சிறுவர் மற்றும் பெண்கள் பாதுகாப்பு பணியகத்தினால் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

குழந்தைகளுக்காகப் பணியாற்றும் அமெரிக்க அரச நிறுவனமான NCMEC இன் அறிக்கையின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்ட விசாரணையில் சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

புத்தளம் ஆனமடுவ பிரதேசத்தில் வசிக்கும் 34 வயதுடைய நபரொருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபர் தொலைபேசிகளை பழுதுபார்க்கும் நிலையம் ஒன்றை நடத்தி வருவதாக பொலிஸ் விசாரணையில் தெரியவந்துள்ளது. கைது செய்யப்பட்ட சந்தேக நபர் 2022 ஆம் ஆண்டிலிருந்து வெளிநாட்டில் உள்ள சிறுவர்களின் புகைப்படங்களை பயன்படுத்தி ஆபாச காணொளிகளை உருவாக்கியுள்ளதாக பொலிஸ் விசாரணையில் மேலும் தெரியவந்துள்ளது. (ம-4)

## காணிகள்...

யாழ். மாவட்டச் செயலகத்தில் நேற்றுஇடம்பெற்ற மீள்குடியேற்ற செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடலில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கருத்து தெரிவிக்கையில், தமது அமைச்சிற்கு ஒதுக்கப்பட்ட நிதியில் மூன்றில் ஒரு பங்கு மீள்குடியேற்றம் உட்பட ஏனைய திட்டங்களுக்காக யாழ்ப்பாண மாவட்ட அபிவிருத்திக்கே ஒதுக்கப்பட்டுள்ளது.

தேவைப்பாடுகளை சாதகமாக பரிசீலித்து அடுத்த ஆண்டுக்கான வரவு செலவுத் திட்டத்தில் கூடிய நிதி ஒதுக்கீடு செய்ய திட்டங்களை சமர்ப்பிக்குமாறும் கேட்டுக் கொண்டுள்ளார்.

அத்துடன், ஒதுக்கப்படும் நிதிகளை இவ்வாண்டுக்குள் உரிய திட்டங்களுக்கு செலவு செய்து முன்னேற்ற அறிக்கைகளை அனுப்பிவைக்குமாறும் தெரிவித்தார்.

இந்த கலந்துரையாடலில் தேசிய நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொது முகாமையாளர், நகர அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர், மாவட்ட செயலக பிரதம கணக்காளர், திட்டமிடல் பணிப்பாளர், பிரதம பொறியியலாளர், உதவி மாவட்டச் செயலாளர், அமைச்சின் அதிகாரிகள் மற்றும் மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டிருந்தனர். (ம-4,33)

## பொலிஸ்...

சென்றுகொண்டிருந்த குறித்த பொலிஸ் உத்தியோகத்தர் பாரவூர்தி ஒன்றில் மோதியதில் குறித்த விபத்து இடம்பெற்றது.

விபத்தில் படுகாயமடைந்த அவர் வவுனியா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்ட நிலையில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-4,250)



கொக்குவில்
கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில்
(புதுக்கோவில்)

பரிபாலன சபை விசேட பொதுக்கூட்டம்

அன்புடையீர்!

கொக்குவில் கிருபாகர சிவசுப்பிரமணிய சுவாமி கோவில் பரிபாலன சபையின் பிரமாணம் பந்தி 8 இன் பிரகாரம் அங்கத்தவர்களின் எழுத்து மூலமாக 01.01.2022 இல் இருந்து 15.10.2022 வரை காலப் பகுதியின் பட்டயக் கணக்காளர் கணக்காய்வு அறிக்கையை பொதுக்கூட்டத்தில் சமர்ப்பிக்கும் படி கேட்டிருந்தனர். அதன் பிரகாரம் விசேட பொதுக்கூட்டம் 04.05.2025 ஞாயிறு பி.ப 4.00 மணிக்கு ஆலய மண்டபத்தில் நடைபெறும்.

நிகழ்ச்சி நிரல்

1.தேவாரம்
2.தலைவர் உரை
3.செயலாளர் உரை
4.பொருளாளர் பட்டய கனக்காளரின் கணக்கறிக்கை சமர்ப்பித்தல் 01.01.2022 – 31.03.2022 வரை, 01.04.2022 – 15.10.2022 வரை
5.நன்றி உரை

கொக்குவில்
25.04.2025 அங்கத்தவர்களுக்கு மட்டும்

செ.செல்வ[illegible]
செயலாளர்

(4025)



வேலையாட்கள் தேவை

| | |
|---|---|
| மேசன் | - Rs. 3000.00 - 3500.00 |
| மேசன் உதவியாளர் | - Rs. 2500.00 |
| வெல்டர் | - Rs. 3000.00 - 3500.00 |
| தச்சு வேலை | - Rs. 3000.00 - 3500.00 |

(தேவைப்படின் தங்குமிடம், உணவு ஒழுங்கு செய்து தரப்படும்.)

தொடர்பு : 077 724 5399
(காலை 8.00 - மாலை 6.00 வரை) யாழ்ப்பாணம்.

(4028)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மக்களிடையே மலேரியா விழிப்புணர்வு அவசியம்!

## மலேரியா தடை இயக்கத்தின் வைத்திய அதிகாரி

**(நெளுக்குளம்)**

**மலேரியாவை மீண்டும் இலங்கையில் ஏற்படுத்தி விடக் கூடாது என்பதற்காக நாங்கள் அற்பணிப்போடு செயற்பட்டு வருகின்றோம். அதற்கு மக்களது ஒத்துழைப்பு கிடைக்கின்ற பட்சத்தில் ஆபத்திலிருந்து விடுவித்து கொள்ள முடியும் என முல்லைத்தீவு மாவட்ட பிராந்திய மலேரியா தடை இயக்கத்தின் பொறுப்பு வைத்திய அதிகாரி வைத்தியர் தயானந்தறூபன் தெரிவித்தார்.**

மலேரியா தொடர்பான விழிப்புணர்வை ஏற்படுத்தும் நடவடிக்கை நேற்று முன்தினம் புதுக்குடியிருப்பு நகர் பகுதியில் முன்னெடுக்கப்பட்ட பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் தெரிவிக்கையில், இன்றைய தலைமுறையினருக்கு அவ்வளவு பரீட்சயமில்லாத ஒரு நோயாக மலேரியா காணப்படுகின்றது.

ஏனென்றால் 2002 ஆம் ஆண்டிற்கு பின்னர் இலங்கையில் மலேரியா நோயினை சுகாதாரத் திணைக்களத்தினரின் கடும் முயற்சியினால் இல்லாது ஒழிக்கப்பட்டிருந்தது.

உள்நாட்டில் மலேரியா இல்லாத போதும் தற்போது மீண்டும் ஒரு மலேரியா எமது நாட்டிற்குள் வந்துவிடுகின்ற அபாய சூழ்நிலை காணப்படுகின்றது. குறிப்பாக ஆபிரிக்கா, இந்தியா, பாகிஸ்தான், ஆப்கானிஸ்தான் போன்ற தெற்காசிய மற்றும் தென்கிழக்காசிய நாடுகளில் மலேரியா காணப்படுகின்றது. அவ்வாறான நாடுகளிற்குச் சென்று வருபவர்கள் மூலம் எமது நாட்டிற்கு மலேரியா வந்தடைகின்றது.

இவ்வாறான நாடுகளிற்கு செல்ல இருப்பவர்கள் முன்கூட்டியே அதற்குரிய தடுப்பு மருந்துகளைப் பெற்று சென்றால் மலேரியா நோய் ஏற்படாது தடுக்க முடியும். மீண்டும் மலேரியா என்ற ஒரு நோயினை இலங்கையில் ஏற்படுத்தி விட கூடாது. அதற்கு மக்களது ஒத்துழைப்பும் அவசியம் தேவை என தெரிவித்தார். (6-8-299)

# ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகவுள்ள ரணில்



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாளை மறுதினம் திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கையூட்டல் மற்றும் ஊழல்ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகவுள்ளதாக அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார்.

விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் சாமர சம்பத் தசநாயக்க கைது செய்யப்பட்டமை தொடர்பாக முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க விடுத்த அறிக்கையைத் தொடர்ந்து, கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாகுமாறு அவருக்கு அழைப்பு விடுக்கப்பட்டது.எனினும், வெளிநாடு சென்றுள்ள தமது சட்டத்தரணி நாடு திரும்பியதன் பின்னர், கையூட்டல் மற்றும் ஊழல் ஒழிப்பு ஆணைக்குழுவில் முன்னிலையாவதாக, ரணில் விக்கிரமசிங்க தெரிவித்திருந்தார்.

இந்தநிலையில் ரணில் விக்கிரமசிங்க குறித்த திகதியில் ஆணைக் குழுவில் முன்னிலையாவார் என்று அவரது சட்டத்தரணி தெரிவித்துள்ளார். (6-8)

# ஆற்றில் நீராடச் சென்ற மாணவன் நீரில் மூழ்கிப் பலி

(கொழும்பு)

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பாலத்தின் அருகில் உள்ள ஆற்றில், நேற்று முன்தினம் மாலை நீராடச் சென்ற மாணவன் நீரில் மூழ்கி மரணித்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

கிண்ணியா குறிஞ்சாக்கேணி பகுதியைச் சேர்ந்த 10 வயது மாணவன் ஒருவனே இவ்வாறு உயிரிழந்ததாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மூன்று மாணவர்கள் நீராடச் சென்றிருந்த நிலையில் அவர்களுள் ஒருவர் காணாமல் போயிருந்தார்.தேடுதல் நடவடிக்கையின் போது காணாமல் போயிருந்த மாணவன் சடலமாக கண்டு பிடிக்கப்பட்டார்.குறித்த சம்பவம் தொடர்பான மேலதிக விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (6-8)




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஓட்ட கப்பலப்பா...
# தரை தட்டி நிக்குதப்பா...

## சென்னைக்கு நேற்று 7ஆவது தோல்வி
## பிளே - ஓப் வாய்ப்பை பறிகொடுத்து பரிதாபம்



இந்தியன் பிரீமியர் தொடரில் ஏழாவது தோல்வியை சந்தித்த சென்னை அணி, "பிளே-ஓப்" வாய்ப்பை இழந்தது.

சேப்பாக்கம் மைதானத்தில் நடந்த பிரீமியர் லீக் போட்டியில் சென்னை - ஹைதராபாத் அணிகள் மோதின.

இரு அணிகளும் வெற்றி பெற வேண்டிய கட்டாயத்தில் களமிறங்கின. சென்னை "லெவன்" அணியில் ரச்சின் ரவிந்திரா, விஜய் சங்கர் நீக்கப்பட்டு டிவால்ட் பிரவிஸ், தீபக் ஹூடா இடம் பெற்றனர். நாணயச்சுழற்சியில் வென்ற ஹைதராபாத் அணியின் தலைவர் பட் கம்மின்ஸ் பந்து வீச்சைத் தேர்வு செய்தார்.

**ஆயுஷ் ஆறுதல்:**

சென்னை அணியின் துடுப்பாட்டம் இம்முறையும் எடுபடவில்லை. மொஹமட் ஷமி வீசிய முதல் பந்தில் ஷேக் ரஷீத் (0) ஆட்டமிழந்தார். ஆயுஷ் மாத்ரே ஓரளவுக்கு நம்பிக்கை கொடுத்தார். கம்மின்ஸ், உனத்கட் ஓவரில் தலா 2 பவுண்டரிகள் விரட்டினார். ஹர்ஷல் படேல் "வேகத்தில்" சாம் கர்ரான் (9) வெளியேறினார். கம்மின்ஸ் பந்தில் ஆயுஷ் மாத்ரே (30) ஆட்டமிழந்தார்.

**பிரவிஸ் அபாரம்:**

ஜீஷான் அன்சாரி பந்தில் ஒரு சிக்சர் விளாசிய ரவிந்திர ஜடேஜா (21), கமிந்து மெண்டிஸ் "சுழலில்" போல்டானார். அடுத்து வந்த ஷிவம் துபே, ஷமி வீசிய 11வது ஓவரில் வரிசையாக 2 பவுண்டரி விரட்டினார். இவருக்கு ஒத்துழைப்புக் கொடுத்த பிரவிஸ், கமிந்து மெண்டிஸ் வீசிய 12வது ஓவரில் 3 சிக்சர்கள் பறக்கவிட்டார். ஐந்தாவது விக்கெட்டுக்கு 40 ஓட்டங்கள் சேர்த்த போது, ஹர்ஷல் படேல் பந்தை தூக்கி அடித்த பிரவிஸ் (42), கமிந்து மெண்டிசின் கலக்கல் பிடியெடுப்பில் ஆட்டமிழந்தார். உனத்கட் பந்தில் துபே (12) ஆட்டமிழந்தார். அடுத்து தல தோனி களமிறங்கினார். அன்சாரி பந்தை பவுண்டரிக்கு விரட்டி அசத்தினார். இந்த நேரத்தில் அவசரப்பட்ட தோனி (6), ஹர்ஷல் படேல் பந்தில் ஆட்டமிழக்க, ரசிகர்கள் அதிர்ச்சி அடைந்தனர். கடைசி கட்டத்தில் தீபக் ஹூடா (22) ஆறுதல் கொடுத்தார். சென்னை அணி 19.5 ஓவர்களில் 154 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தது.

**இஷான் அபாரம்:**



சவாலான இலக்கை விரட்டிய ஹைதராபாத் அணிக்கு அபிஷேக் சர்மா (0) ஏமாற்றினார். அடுத்து வந்த இஷான் கிஷான், கலீல் அகமது வீசிய 3வது ஓவரில் 2 பவுண்டரிகள் விரட்டினார். டிராவிஸ் ஹெட் (19) நிலைக்கவில்லை. ஜடேஜா "சுழலில்" கிளாசன் (7) சிக்கினார். இஷான் கிஷான் (44), நூர் அகமது பந்தில் ஆட்டமிழந்தார். சாம் கர்ரான், ஜடேஜா பந்தில் தலா ஒரு சிக்சர் பறக்கவிட்ட அனிகேத் வர்மா, 19 ஓட்டங்களில் ஆட்டமிழந்தார்.

நூர் அகமது பந்தில் 2 பவுண்டரி விரட்டினார் கமிந்து மெண்டிஸ். மறுமுனையில் அசத்திய நிதிஷ் குமார் ரெட்டி, பதிரானா வீசிய 17வது ஓவரில் 2 பவுண்டரி அடித்தார். ஐதராபாத் அணி 18.4 ஓவர்களில், 5 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்கள் எடுத்து வெற்றி பெற்றது. கமிந்து (32), நிதிஷ் ரெட்டி (19) ஆட்டமிழக்காமல் இருந்தனர். (ம-4)

**வாய்ப்பு எப்படி**

ஏழாவது தோல்வியை பெற்ற சென்னை அணியின் "பிளே-ஓப்" வாய்ப்பு முடிவுக்கு வந்தது. மீதமுள்ள 5 போட்டியில் வெற்றி பெற்றால், 14 புள்ளி பெறும். "ரன்-ரேட்டில்" பின்தங்கி இருப்பதால் சென்னை அணி வெளியேறுவது உறுதி.

**முதல் வெற்றி**

சென்னை, சேப்பாக்கம் மைதானத்தில் சென்னைக்கு எதிராக ஹைதராபாத் அணி முதல் வெற்றியை பதிவு செய்தது. இவ்விரு அணிகள் இங்கு விளையாடிய 6 போட்டிகளில் சென்னை 5, ஹைதராபாத் ஒரு போட்டியில் வென்றன.

## பஹல்காம் தாக்குதல் எதிரொலி
## பாகிஸ்தானுடன் விளையாடமாட்டோம்
### இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை

பஹல்காம் தாக்குதலின் எதிரொலியாக பாகிஸ்தான் கிரிக்கெட் அணியுடன் விளையாடப் போவதில்லை என இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ ) அறிவித்துள்ளது.

ஜம்மு காஷ்மீர் மாநிலம் பஹல்காமில் பாகிஸ்தான் ஆதரவு பயங்கரவாதிகள் நடத்திய கொடூரத் தாக்குதலில் 26 சுற்றுலா பயணிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர். நாடு முழுவதும் பெரும் அதிர்வலையை ஏற்படுத்திய இத்தாக்குதலுக்கு விளையாட்டுப் பிரபலங்களும் கடும் கண்டனம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து பி.சி.சி.ஐ. துணைத் தலைவர் ராஜீவ் சுக்லா கருத்துத் தெரிவிக்கையில் 'இனிவரும் நாட்களிலும் இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் கண்டிப்பாக விளையாடமாட்டோம். பாதிக்கப்பட்டவர்களுடன் நாங்கள் இருக்கிறோம். எங்கள் அரசாங்கம் என்ன சொன்னாலும், நாங்கள் செய்வோம். அரசாங்கத்தின் நிலைப்பாடு காரணமாக இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாடுவதில்லை. இனிவரும் காலங்களிலும் இருதரப்பு போட்டிகளில் பாகிஸ்தானுடன் விளையாட மாட்டோம். ஆனால் ஐ.சி.சி. போட்டிகளை பொறுத்தவரை, ஐ.சி.சியின் வற்புறுத்தலின் காரணமாக நாங்கள் விளையாடுகிறோம்" இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அத்துடன் ஐ.சி.சி.தொடர்களில் இந்தியாவையும் பாகிஸ்தானையும் ஒரே குழுவில் சேர்க்க வேண்டாம் என ஐ.சி.சி.இற்கு பி.சி.சி.ஐ. கடிதம் எழுதியுள்ளதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

இந்தியா - பாகிஸ்தான் எல்லை பிரச்சினை காரணமாக கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக இரு தரப்பு தொடர்களில் விளையாடவில்லை. ஐ.சி.சி. தொடர்களில் மட்டுமே விளையாடி வருகின்றன என்பது குறிப்பிடத்தக்கது. (6-8)

## இன்றைய ஆட்டங்கள்




## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 300 | 400 | 350 |
| உருளைக்கிழங்கு | 200 | 180 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 200 | 300 | 200 | 250 |
| தக்காளி | 600 | 700 | 600 | 800 |
| மரவள்ளிக்கிழங்கு | 280 | 250 | 250 | 200 |
| கோவா | 350 | 300 | 300 | 400 |
| கரட் | 550 | 650 | 550 | 600 |
| பூசணி | 200 | 150 | 200 | 250 |
| புடோல் | 300 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 80 | 100 | 80 | 120 |
| சின்ன வெங்காயம் | 100-300 | 250 | 150-300 | 400 |
| பெரிய வெங்காயம் | 180 | 140 | 130 | 150 |
| பாகற்காய் | 400 | 500 | 450 | 500 |
| வெண்டக்காய் | 300 | 200 | 250 | 400 |
| கருணைக் கிழங்கு | 300 | 200 | 200 | 300 |
| பயற்றங்காய் | 160 | 200 | 250 | 400 |
| லீக்ஸ் | 250 | 250 | 200 | 300 |
| பீற்றூட் | 500 | 400 | 450 | 600 |
| கறிமிளகாய் | 450 | 450 | 500 | 600 |
| முருங்கைக்காய் | 3000 | 2000 | 1000-2000 | 2000 |
| போஞ்சி | 600 | 650 | 500 | 800 |
| கத்தரிதம்புள்ள | 350 | 250 | -- | 320 |
| கீரை - 1 பிடி | 80-120 | 100 | 60 | 100 |
| தேசிக்காய் | 250 | 150 | 200 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 280 | 200 | 150-200 | 200-250 |
| இராசவள்ளி | 700 | 600 | 550 | 600 |
| வெங்காயப்பூ | 600 | -- | -- | -- |
| முள்ளங்கி | 120 | 150 | 120 | 300 |
| பொன்னாங்காணி | 70 | 150 | 100 | 60 |
| வல்லாரை | 70 | 80 | 80 | 100 |
| ஈரப்பலா | -- | 100 | -- | -- |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தந்தையின் சிதைக்கு தீ மூட்டிய 9 வயது மகன்

## மனதை உருக்கிய தருணம்



(டில்லி)

பஹல்காமில் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் ஒடிசாவை சேர்ந்த 41வயதான பிரசாந்த் சத்பதி உயிரிழந்தார். மத்திய பெட்ரோ கெமிக்கல் இன்ஜினியரிங் மையத்தில் ஊழியராகப் பணியாற்றிய பிரசாந்த் சத்பதி குடும்பத்துடன் பஹல்காமுக்கு சென்றிருந்தார். இந்நிலையில் அங்கு தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் உயிரிழந்தார்.

அவரது இறுதிச் சடங்கு ஒடிசாவில் உள்ள பாலசோர் மாவட்டம், இஷானி கிராமத்தில் நேற்று முன்தினம் நடந்தது.

இதில் மாநில முதல்வர் மோகன் சரண் மாஜி,அமைச்சர் பிபூதி பூஷன் ஜேனா கலந்து கொண்டு அவரது உடலுக்கு அஞ்சலி செலுத்தினர். பின்னர் உடல் தகனம் செய்யப்பட்டது. பிரசாந்த் சத்பதியின் 9 வயது மகன் அனுஜ் குமார் சத்பதி தந்தையின் சிதைக்கு தீ மூட்டினான். இந்த காட்சி காண்போர் நெஞ்சை உருக்கியிருந்தது. (6-8)

# 'அப்பா எங்கே?' கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை

## தாக்குதலில் கணவனை இழந்த பெண் உருக்கம்

(டில்லி)

'அப்பா எங்கே?' என்ற என் மகனின் கேள்விக்கு பதில் சொல்ல முடியவில்லை என பஹல் காம் தீவிரவாதத் தாக்குதலில் கணவனை இழந்த பெண் உருக்கமாக தெரிவித்தார்.

மேற்கு வங்க மாநிலத்தைச் சேர்ந்த பிடன் அதிகாரி, மனைவி மற்றும் மூன்றரை வயது மகனுடன் அமெரிக்காவின் புளோரிடாவில் வசித்து வருகிறார். கடந்த 8 ஆம் திகதி சொந்த ஊருக்கு வந்த அவர்கள், காஷ்மீருக்கு சுற்றுலா சென்றனர். இந்நிலையில்தான், பஹல்காமிலம் நடந்த தீவிரவாதத் தாக்குதலில் பிடன் கொல்லப்பட்டார். இதுகுறித்து அவருடைய மனைவி கூறும் போது, "தீவிரவாதிகள் சுற்றுலாப் பயணிகளின் ஊர் பற்றி கேட்டார்கள்.

பின்னர் ஆண்களை தனியாக நிற்க வைத்து அவர்களின் மதம் பற்றி கேட்டார்கள். அதன் பிறகு ஒவ்வொருவராக துப்பாக்கியால் சுட்டனர்.

என் மகனின் கண் முன்னே என் கணவரை சுட்டுக் கொன்றனர். இப்போது, அப்பா எங்கே என என் மகன் அடிக்கடி கேட்கிறான். அப்பா இனி வரமாட்டார் என அவனிடம் எப்படி சொல்வது என்றே தெரியவில்லை" என மனம் உடைந்த நிலையில் தெரிவித்தார். (6-8)


### மு/முல்லைத்தீவு மகா வித்தியாலயம் முல்லைத்தீவு

### பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்-2025

மேற்படி எமது பாடசாலையின் பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டமும் நிர்வாகத் தெரிவும் எதிர்வரும் 2025/05/12 திங்கட்கிழமை காலை 9.30 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் நடைபெற இருப்பதனால் அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

நன்றி

(C-2799)

அதிபர்,
மு/முல்லைத்தீவு மகாவித்தியாலயம்.


# தலையில் துப்பாக்கி வைத்த தீவிரவாதி; உயிர்தப்பியது எப்படி?

## தந்தையை இழந்த மகளின் பதிவு

(டில்லி)

காஷ்மீர் பஹல்காமில் சுற்றுலாப் பயணிகள் மீது தீவிரவாதிகள் நடத்திய தாக்குதலில் கொச்சியை சேர்ந்த ராமச்சந்திரன் என்பவரும் உயிரிழந்தார்.

இவர் மனைவி ஷீலா, மகள் ஆரதி மற்றும் இவரது 6 வயதான இரட்டைக் குழந்தைகளுடன் காஷ்மீருக்கு சென்றிருந்தார். ராமச்சந்திரனின் உடல் நேற்று முன்தினம் இரவு கொச்சிக்கு கொண்டுவரப்பட்டது.

தன்னுடைய கண்ணெதிரே தந்தை தீவிரவாதிகளால் சுடப்பட்டு இறந்தது குறித்து மகள் ஆரதி கூறியதாவது,

சம்பவத்தன்று மதியம் 2 மணியளவில் அம்மாவை ஹோட்டலில் விட்டுவிட்டு நானும், குழந்தைகளும் அப்பாவும் பஹல்காமில் உள்ள பைசரன் பகுதிக்கு சென்றோம். நாங்கள் சென்ற 10 நிமிடத்திலேயே தீவிரவாதிகள் தாக்குதல் நடத்த தொடங்கி விட்டனர். முதலில் ஏதோ ஒரு சத்தம் கேட்டது.

இதன் பின்னர் மீண்டும் வெடி சத்தம் கேட்டபோதுதான் ஏதோ விபரீதம் நடக்கிறது என்பதை நான் உணர்ந்தேன். சிறிது நேரத்தில் ஒரு நபர் எங்களுக்கு அருகே வந்து என்னுடைய அப்பாவிடம் கலிமா சொல்லுமாறு கூறினார்.

என்னவென்று புரியவில்லை என்று இரண்டு முறை என்னுடைய அப்பா சொன்னார். உடனே கண்ணிமைக்கும் நேரத்தில் அப்பாவை நோக்கி அந்த தீவிரவாதி சுட்டான். நான் அப்பாவை கட்டிப்பிடித்து கதறி அழுதேன்.

நான் அழுவதை பார்த்து என்னுடைய குழந்தைகளும் கதறின. அப்போது என்னுடைய தலைமீதும் யாரோ துப்பாக்கியை வைத்து அழுத்துவது தெரிந்தது.

இந்த சமயத்தில் என்னுடைய குழந்தைகள் கதறி அழுததால் தான் அந்தத் தீவிரவாதி என்னை சுடாமல் சென்றான். இதன்பின் நான் என்னுடைய குழந்தைகளை தூக்கிக் கொண்டு அங்கிருந்து ஓடினேன்.

சிறிது தூரம் சென்ற பின்னர் அங்கிருந்த உள்ளூர் மக்கள் எனக்கு மிகவும் உதவியாக இருந்தனர். அவர்கள் என்னை சொந்த தங்கையைப் போல பார்த்துக் கொண்டனர்.

அங்கிருந்த டிரைவர்களான முசாபிர், சமீர் ஆகியோர் செய்த உதவியை என்னால் மறக்க முடியாது. உங்களை அல்லா காப்பாற்றுவார் என்று கூறி நான் அங்கிருந்து புறப்பட்டு ஹோட்டலுக்கு வந்தேன். இவ்வாறு அவர் கூறினார். (6-8)


### ஆதன உரிமை மாற்ற அறிவித்தல்

| | |
|---|---|
| வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை | : பண்டத்தரிப்பு கிராம உப அலுவலகம் |
| விண்ணப்பதாரரின் பெயர் | : கந்தசாமி விஜிகாந்தன் |
| ஆதனப்பதிவேட்டின் படி பெயர் | : சொந்தக்காரர் |

ஆதன இல - 881 வீதி - சண்டிலிப்பாய் சேந்தாங்குள வீதி வட்டாரம் -03

வட்டாரம் 03 சண்டிலிப்பாய் சேந்தாங்குள வீதி ஆதன இலக்கம் **881** இல் அமைந்துள்ள உறுதியின் பிரகாரம் வடமாகாணம் யாழ்ப்பாணம் வலிகாமம் மேற்குப் பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று பெரியவிளான் இறை "கழுந்திரவத்தை" எனும் பெயருள்ள நிலப்பரப்பு **03** விஸ்தீரணமுள்ள இவ் ஆதனம் பிரசித்த நொத்தாரிசு கந்தையாப்பிள்ளை சேனாதிராசா அவர்கள் முகதாவில் நிறைவேற்றப்பட்ட 7327 ஆம் இலக்க 1968.05.20 ஆம் திகதிய உறுதி மூலம் தாவிதுப்பிள்ளை நீக்கிலஸ் மகள் லூட்ஸ் என்பவருக்கு சொந்தமானதாகும்.

மேற்குறிப்பிட்ட உறுதியின் படி நீக்கிலஸ் மகள் லூட்ஸ் அந்தோனியா அவர்கள் காலம் சென்றதனால் அவர்களது வாரிசான யூஜின் கிறிஸ்ரி சுகுமார் யோசேப் என்பவருக்கு 0139 இலக்க 2023.08.16 திகதிய உறுதி மூலம் முதுச உரித்து வெளிப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

**ஆதன விபரம்**

கிழக்கு - சண்டிலிப்பாய் சேந்தாங்குளம் வீதி,
வடக்கு - சவரிமுத்து வஸ்தியாம்பிள்ளையினதும் மேரி ஆன்கிறேசுவினதும் உரிமைக்காரர்களுக்குரிய ஆதனம்,
மேற்கு - சூசைப்பிள்ளை சுவாம்பிள்ளைக்கும் சூசைப்பிள்ளை வஸ்தியாம்பிள்ளைக்கும் பங்குதாரர்களுக்கும் உரிய ஆதனம்.
தெற்கு - சவரிமுத்துவுக்கும் பெண் மரியாம்பிள்ளைக்கும் பங்குதாரர்களுக்கும் உரிய ஆதனம்,

மேற்குறித்த ஆதனம் கந்தசாமி விஜிந்தன் என்பவருக்கு 0377 இல 19.08.2024 ஆம் திகதிய உறுதி மூலம் விற்கப்பட்டுள்ளது. நிலஅளவையாளர் புஸ்பராஜாவினால் 10.08.2024 ஆம் திகதி 7799 இலக்க நில அளவைப் படம் மூலம் ஆதனம் நிலப்பரப்பு 3 குழி 11.17 காணப்படுகின்றது. கந்தசாமி விஜிந்தன் என்பவர் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் பண்டத்தரிப்பு கிராம உபஅலுவலகத்தில் பெயர் மாற்றத்திற்கு விண்ணப்பித்துள்ளார். மேற்படி ஆதன உரிமை மாற்றம் செய்வது தொடர்பாக ஏதேனும் ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் இன்றிலிருந்து 30 நாட்களுக்குள் சட்டபூர்வமான ஆவணங்களோடு எழுத்து மூலமாகவோ அல்லது நேரடியாகவோ ஆட்சேபனையை தெரிவிக்குமாறும் ஆட்சேபனை தெரிவிக்காத சந்தர்ப்பத்தில் விண்ணப்பதாரியின் பெயருக்கு ஆதன உரிமை மாற்றம் மேற்கொள்ள நடவடிக்கை எடுக்கப்படும் என்பதையும் இந்த ஆதன உரிமை மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை பொறுப்பாளி அல்ல என்பதனையும் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**செயலாளர்,**
**வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

(4021)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும்

(யாழ்ப்பாணம்)

இணுவில் பொதுநூலகம், சனசமூக நிலையத்தின் 23 ஆவது புனருத்தாரன ஆண்டு நிறைவு விழாவும் பரிசில் வழங்கல் நிகழ்வும் நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2.30 மணிக்கு நிலையத் தலைவர் ம.கஜந்தரூபன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன், சிறப்பு விருந்தினராக வலிகாமம் வலயக்கல்வி அலுவலக கல்வி அபிவிருத்தி பிரதிக் கல்விப் பணிப்பாளர் ஆ.சஞ்ஜீவன், கௌரவ விருந்தினர்களாக திருமதி.ஐ.பாஸ்கரன் (கனடா), திருமதி.செல்வராணி வேலாயுதப்பிள்ளை ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர்.

நிகழ்வில் ஆசியுரையினை தெல்லிப்பளை துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் செஞ்சொற்செல்வர் கலாநிதி. ஆறுதிருமுருகன், தொடக்கவுரையினை இணுவில் பொது நூலக போசகர் பேராசிரியர் க.தேவராஜா ஆகியோர் வழங்கவுள்ளதுடன் வாழ்த்துரையினை இணுவில் அறிவாலயத் தலைவர் பேராசிரியர் வ.மகேஸ்வரன், இணுவில் பொது நூலக போசகர் இரா.அருட்செல்வம் மற்றும் இணுவில் பொதுநூலக சிறுவர் திறன் விருத்தி மைய அதிபர் திருமதி.கமலராணி கிருஸ்ணப்பிள்ளை ஆகியோர் வழங்கவுள்ளனர்.

தொடர்ந்து ஆங்கில விஷேட வகுப்புக்கள், புலமைப் பரிசில் பரீட்சை, துடுப்பாட்ட சுற்றுப்போட்டி, சதுரங்க சுற்றுப்போட்டி ஆகியவற்றில் வெற்றியீட்டிய மாணவர்களுக்கு கேடயங்களும் சான்றிதழ்களும் வழங்கப்படவுள்ளன என ஏற்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர். (க-3-8)

# கொலை செய்த கதையை மறைக்கவா? கொடுப்பனவுகள்!

## கிளிநொச்சியில் உறவுகள் கவனயீர்ப்பு

(தருமபுரம்)

**வலிந்து காணாமலாக்கப்பட்டோருக்கு நீதி கோரி கிளிநொச்சி மாவட்ட வலிந்து காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகளால் நேற்று கவனயீர்ப்பு போராட்டமொன்று முன்னெடுக்கப்பட்டது.**



காணாமல் ஆக்கப்பட்டோர் அலுவலகத்திற்கு முன்பாக இப் போராட்டம் இடம்பெற்றது. இதில் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் கொடுப்பனவுகளை கொடுப்போம் என சொல்வது கொலை செய்த கதையை மறைக்கவே! போன்ற பதாதைகளை ஏந்தி கோஷங்களை எழுப்பிப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதன் போது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகள் ஊடகங்களிடம் கருத்து தெரிவிக்கையில், 2984 ஆவது நாளாகவும் தொடர் போராட்டத்தை முன்னெடுத்து வரும் நிலையில் தமது உறவுகளை தேடி அலைந்து திரிவதாகவும், இதுவரையில் ஆட்சியில் இருந்த எந்த ஒரு அரசாங்கமும் எமக்கான உரிய தீர்வினை பெற்றுத் தரவில்லை எனவும் சர்வதேசத்திடம் ஒரு முகமும் எம்மிடம் ஒரு முகமாக அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

அதேவேளை தற்போதைய அரசாங்கம் கூட ஆட்சிக்கு வருவதற்கு முன்னர் எமது காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்கு உரிய தீர்வு பெற்று தரப்படும் என வாக்குறுதிகள் வழங்கப்பட்டிருந்த போதிலும் இதுவரையில் எந்த விதமான முன்னேற்றகரமான நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படவில்லை என தெரிவித்தனர். (6-8-316)

1978 முதல்
ஈசன்ஸ்
இல.148, பிரதான வீதி, யாழ்ப்பாணம்
021 222 2695
077 429 0613

# யாழ். மாநகர சபையின் கட்டுமானப் பணிகளை

## பார்வையிட்ட அமைச்சர்கள்



(யாழ்ப்பாணம்)

வடமாகாணத்திற்கு வருகை தந்துள்ள நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதியமைச்சர் டி. பி. சரத் ஆகியோர் நேற்று யாழ்ப்பாணத்திற்கு விஜயம் மேற்கொண்டனர்.

யாழில் நிர்மாணிக்கப்பட்டு வரும் யாழ்.மாநகர சபையின் கட்டுமானப் பணிகளையும் இதன்போது பார்வையிட்டனர்.

இதன்போது பாராளுமன்ற உறுப்பினர்களான எஸ். சிறீபவானந்தராஜா, றஜீவன் ஜெயச்சந்திரமூர்த்தி, நகர அபிவிருத்தி சபை அதிகாரிகள், யாழ்.மாநகர சபை ஆணையாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் கலந்து கொண்டனர்.

அதேவேளை நேற்று முன்தினம் கிளிநொச்சி மாவட்ட பதில் அரச அதிபர் எஸ்.முரளிதரனை அமைச்சர் அநுர கருணாதிலக மற்றும் பிரதியமைச்சர் டி.பி.சரத் ஆகியோர் சந்தித்து மாவட்டத்தின் தேவைகளை கேட்டறிந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (6-8)

### புங்குடுதீவு கண்ணகை அம்மன் வருடாந்த மஹோற்சவம்

(யாழ்ப்பாணம்)

புங்குடுதீவு அருள்மிகு கண்ணகை அம்மன் என அழைக்கப்படும் ஸ்ரீ இராஜ ராஜேஸ்வரி அம்பாள் ஆலய வருடாந்த மஹோற்சவம் (2025) நாளை மறுதினம் திங்கட்கிழமை கொடியேற்றத் திருவிழாவுடன் ஆரம்பமாகி தொடர்ந்து 15 தினங்கள் இடம்பெறவுள்ளது.

இவ் மஹோற்சவ தினங்களில் எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இரதோற்சவமும், 12 ஆம் திகதி திங்கட்கிழமை தீர்த்தோற்சவமும், 13 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பூங்காவன உற்சவமும் இடம்பெறவுள்ளதுடன ஆலய பரிபாலன தர்மகர்த்தா சபையினர் தெரிவித்துள்ளனர். (க-3-8)

# இராசிபலன்

26.04.2025
சித்திரை 13, சனிக்கிழமை
திரயோதசி காலை 6.24 மணிவரை
சதுர்த்தசி பின்னிரவு 4.01 மணிவரை

ரேவதி பின்னிரவு 2.48 மணிவரை
சுபநேரம் 2.59-4.29 மணிவரை
இராகுகாலம் 8.59-10.29 மணிவரை

சந்திராஷ்டமம்- உத்தரம்

வளவன்

**மேஷம்** — காரிய அலைச்சல்கள் சற்று அதிகரிக்கும், பயணங்களால் மனச் சோர்வு ஏற்படலாம், முயற்சிகளில் சிறு தாமதம் ஏற்படலாம், சுப விரயங்கள் மேலோங்கும் நாள்.

**ரிஷபம்** — தொலைதூரத்திலிருந்து சுப தகவல்கள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் எளிதில் முன்னேற்றம் காணும் நாள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**மிதுனம்** — பெரிய மனிதர்களின் தொடர்புகள் கிடைக்கும் வாய்ப்புண்டு, விருந்துகளில் கலந்து மகிழும் வாய்ப்புண்டு, மன நிறைவு கூடும் நாள், கூட்டு முயற்சிகள் முன்னேற்றம் தரும்.

**கடகம்** — ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும், பிற இனத்தவரால் பெருமைகள் வந்து சேரலாம், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், உறவினர் வழியில் எதிர்பார்ப்புக்கள் நிறைவேறலாம்.

**சிம்மம்** — சிந்தித்து செயற்பட வேண்டிய நாள், மனதில் இனம்புரியாத குழப்பங்கள் தோன்றி மறையும், எடுத்த காரியங்களை நிறைவேற்ற அதிக பிரயாசை காட்ட வேண்டிய நாள்.

**கன்னி** — கேளிக்கை கொண்டாட்டங்களில் கலந்து கொள்ளும் வாய்ப்புண்டு, குடும்பத் தேவைகளை நிறைவு செய்யும் எண்ணம் உருவாகும், நட்பு வட்டம் விரிவடையும் நாள்.

**துலாம்** — நீண்ட நாளைய பிணக்குகளில் திசை திருப்பங்கள் ஏற்படலாம், கடன் பாக்கிகளை கொடுத்து மகிழும் வாய்ப்புண்டு, ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காணும் நாள்.

**விருச்சிகம்** — புண்ணிய காரியங்களில் ஆர்வம் காட்டுவீர்கள், தொலைபேசி வழியில் அனுகூலம் தரும் செய்திகள் வந்து சேரலாம், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.

**தனுசு** — பொழுதுபோக்கு விடயங்களில் ஆர்வம் கூடும், நண்பர்கள் நம்பிக்கைக்குரியவர்களாக நடந்து கொள்வர், சுப செய்திகள் வந்து சேரலாம், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள்.

**மகரம்** — உற்சாகத்தோடு செயற்படும் நாள், உள்ளம் மகிழும் சம்பவமொன்று இல்லத்தில் இடம்பெறலாம், ஏட்டிக்குப் போட்டியாக செயற்பட்டவர்கள் மனம் மாறுவர்.

**கும்பம்** — குடும்பத்தில் உங்களின் செல்வாக்கும் மேலோங்கும் நாள், எடுத்த காரியங்களில் கண்ணும் கருத்துமாக இருப்பீர்கள், கௌரவம் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம்.

**மீனம்** — புதிய பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, வழிபாடு ஆனந்தம் தரும், மற்றவர்கள் வாங்கிய பொருளைப் பார்த்து நீங்களும் வாங்க முற்படுவீர்கள்.

உத்தமமான மனைவி கணவனுக்கு ஒரு கிரீடம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 23ஆவது வீரர்களின் போர் - 2025

## யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி




Standing (L.R): M.Mathusiyanth, S.Tharmilan, N.Dayanusan, T.Abishek, T.Santhosh, S.Kirushekesan, N.Nikeshan, L.Kajanan, T.Thilakshan, K.Dilaxshan, S.Abisharan, R.Kanistan, V.Ronvith, T.Kasvin

Seated : (L-R) : Mr.Jeyatharshan(Assistant Coach),Mr. V.Pavasayanthan(Under13 In charge), Mr.S.Suthaharan (Un15 In charge) Mrs.N.Paranitharan(Sports Secretory),Mr.K.Vishnupirakash(Cricket Co- Ordinator,MIC) M.Piranavan(Caption), Mr.T.Logarajah (Principal) S.Vasikaran(V.Captaion) Mr.B.Suthakaran(POG) Mr.Subaskaran, Mr.J.V.Alvinjens(Under17 In charge), Mr.G.JerikThusan (Coach)

## யா/மகாஜனக் கல்லூரி




J/ Mahajana College Battle of the Heroes 23rd Battle - 2025

Standing (L-R):- K. Arjithan,V.Kajathipan,K. Kowthaman,M. Lakeesan,U. Jowelroshan,K.Chachchin,U. Tharanikan,T.Areeshkanth,M. Mohamedrilan,S. Thishankan,V.Thushakan,J.Jeyatharsan

Seated (L-R):- Mr.R. Vignamohan(Master in Charge),Mr.R.Mathusan (Coach),Mr.S. Ragasiyan (Vice Captain), Mrs.N.Sangeepan(Deputy Principal), Mr.U.Thurasikan (Captain), Mr.R.Pushparatnam (Principal) ,Mr.V.Chandrasekar (Sports Co-ordinator) T.Abishanth (Wicket keeper) ,Mr.N.Thilakaraj(P.O.G), Mr.V.Umasuthan (Cricket Co-ordinator)



### ஸ்கந்தவரோதயக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

மிக நீண்ட வரலாற்றுப் பாரம்பரியத்தை உடைய ஸ்கந்தவரோதயக் கல்லூரி மற்றும் மகாஜனக் கல்லூரிக்கிடையில் நட்புறவை மேம்படுத்தி வளர்த்துக் கொள்ளும் நோக்கிலான வீரர்களின் போர் என்றழைக்கப்படும் 2025 இற்குரிய 23 ஆவது துடுப்பாட்டப் போட்டிகள் 26, 27 ஆம் திகதிகளில் ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெறுவதையிட்டு மகிழ்வடைகின்றேன். இருபெரும் கல்லூரிகள் ஒன்றிணைந்து நடாத்துவது சமூகத்திற்கு முன்மாதிரியான செயற்பாடாகும்.

அதேவேளை இப்போட்டியில் பங்குபற்றும் வீரர்கள் ஒற்றுமையுடனும் வெற்றி தோல்வியை சமனாக மதிக்கும் தன்மையும் ஒழுக்கத்துடனும் செயற்படுவது போற்றுதலுக்குரியதாகும்.

மேலும் இப்போட்டி சிறப்புற உதவிய பழைய மாணவர்கள் நிதி அனுசரணையாளர்களுடைய பங்கும் நன்றிக்குரியது. இச்சமரில் இரு பாடசாலை வீரர்களும் தத்தம் கல்லூரிக்கு பெருமை தேடித்தரும் வகையில் சிறந்த ஒழுக்கக் கட்டுப்பாடுகளுடன் தங்கள் திறமையை வெளிப்படுத்த வேண்டும் என வாழ்த்துவதுடன் தொடர்ந்து வரும் காலங்களிலும் வீரர்களின் போர் சிறப்புற வேண்டும் எனக்கூறி வாழ்த்தி விடை பெறுகின்றேன்.

**திரு. த. லோகராஜா,**
**அதிபர், யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி**



### மகாஜனக் கல்லூரி அதிபரின் வாழ்த்துச் செய்தி

2001 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வரும் வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டி இவ் வருடம் நடைபெறுவதற்கு கைகூடியிருப்பதையிட்டு மகிழ்வடைகின்றேன். கொரோனாத் தொற்றுக் காரணமாக 2021, 2022 காலப்பகுதியில் போட்டிகள் நடைபெறவில்லை. இவ் வருடம் நடைபெறுவது 23 ஆவது போட்டி ஆகும். நகர்ப்புறத்தில் மட்டும் அல்லாது கிராமப் புறத்திலும் துடுப்பாட்டத் திறன்களை வளர்க்கும் நோக்கோடு இரு பாடசாலை சமூகத்தினரும் இணைந்து இப் போட்டிகளை ஆரம்பித்திருந்தனர். வீரர்களிடையே புரிந்துணர்வு, ஆரோக்கியமான போட்டித் தன்மை, இலக்கை நோக்கி நேர்வழியில் நகர்தல் என்பவற்றை இவ்வாறான விளையாட்டுக்கள் உருவாக்குகின்றன. வீரர்களை ஆளுமைமிக்கவர்களாக வளர்த்து விடுகின்றன. கடந்த காலங்களில் மிக அமைதியான முறையில் கட்டுக் கோப்பாக இப் போட்டிகள் நடைபெற்று வருவதற்கு இரு பாடசாலைச் சமூகங்களும் ஒத்துழைப்பை வழங்கி இருந்தன. நிதி அனுசரணையாளர்களின் பங்கும் இப் போட்டிகள் நடைபெறுவதற்கு உந்து சக்தியாக அமைகின்றன. மேலும் காவல்துறையினரும் தம்மாலான ஒத்துழைப்பினை வழங்கி வருகின்றார்கள். இனிவரும் காலங்களிலும் இப் போட்டிகள் சிறந்த முறையில் நடைபெற வாழ்த்துகின்றேன்.

**திரு. இ. புஸ்பரட்ணம்,**
**அதிபர், யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**



### ஸ்கந்தா அணித்தலைவரின் சிந்தனை

வீரர்களின் போர் என வர்ணிக்கப்படும் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் மகாஜனக் கல்லூரிக்கும் இடையிலான 23ஆவது துடுப்பாட்ட நிகழ்வு எதிர்வரும் 26, 27ஆம் திகதிகளில் யா/ ஸ்கந்தவரோதயக் கல்லூரி மைதானத்தில் நடைபெற உள்ளது. 23 ஆவது துடுப்பாட்டப் போட்டிக்கு அணித்தலைமைப் பொறுப்பை ஏற்று செயற்படுவதில் பெரும் மகிழ்ச்சி யடைகிறேன். எமது கல்லூரி அதிபர், கிரிக்கெட் இணைப்பாளர், அணிப் பொறுப்பாசிரியர், பயிற்றுவிப்பாளர், ஆசிரியர்கள் அனைவரின் சிறந்த வழிப்படுத்தலில் எமது அணி சிறப்பாக தயாராகி உள்ளது. எமது கல்லூரி அணிவீரர்கள் ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் செயற்படக்கூடிய வீரர்கள் என்பதனையிட்டு நான் பெருமையடைகிறேன். வெற்றியையும் தோல்வியையும் சமம் என மதித்து இரு கல்லூரிகளுக்கும் இடையிலான நட்பினை வளர்ப்பதே இத் துடுப்பாட்ட நிகழ்வின் முக்கிய நோக்கமாகும். இப் போட்டி சிறப்புற நடைபெற எமது கல்லூரி வளாகத்தில் குடி கொண்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும் ஸ்கந்தப் பெருமானைப் பிரார்த்திக்கின்றேன்.

**ம. பிரணவன் - அணித்தலைவர்,**
**யா/ஸ்கந்தவரோதயக் கல்லூரி.**



### மகாஜன அணித்தலைவரின் சிந்தனை

2001 ஆம் ஆண்டிலிருந்து நடைபெற்று வரும் வீரர்களின் போர் துடுப்பாட்டப் போட்டி இம் முறை 23 ஆவது போட்டியாக அமைகின்றது. விளையாடுகின்ற இரு அணிகளும் வெற்றியை நோக்காகக் கொண்டே களமிறங்குகின்றன. ஸ்கந்தா அணியும் பலமான அணியே, போட்டி விறுவிறுப்பாகவே அமையும் என நினைக்கின்றேன். வெற்றிக்காக கடுமையாக முயற்சிப்போம். விளையாட்டு விதிகளை மதித்து இப் போட்டியை சிறந்த முறையில் எதிர்கொள்வோம்.

**உ. துளசிசன் - அணித்தலைவர்,**
**யா/மகாஜனக் கல்லூரி, தெல்லிப்பழை.**

ஊடக அனுசரணை :
பிள்ளையார் வெதுப்பகம்
கே.கே.எஸ் வீதி, சுன்னாகம்.
077 3100 128
(சி-2800)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.பல்கலைக்கழக கலைப்பீட பொன்விழாவு



## நல்லை ஆதீன குரு முதல்வரின் அருளாசிச் செய்தி

பேரன்பு மிக்க பெருந்தகையீர்! யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்டு 50 ஆண்டுகளை நிறைவு செய்துள்ளது. இந்த மகிழ்வான வேளையில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தில் படித்துப்பட்டம் பெற்ற பழைய மாணவர்கள் தாங்கள் கல்வி பயின்ற பல்கலைக்கழகத் தாய்க்கு அலங்காரம் செய்யும் முகமாக மலர் ஒன்றை வெளியிட முன்வந்திருப்பது வரவேற்கப்பட வேண்டிய விடயம்.

எங்கள் யாழ்ப்பாணம் உயர் கல்விப்புலமை கொண்ட தேசம். அதைச் சான்றுப்படுத்துவதாக 50 ஆண்டு கால நிறைவைக் கொண்டுள்ள எங்கள் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் விளங்குகின்றது. இன்று உலகளாவிய ரீதியில் நம் தமிழ் மக்கள் பரந்து வாழுகின்றனர். அவர்களில் பலர் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் படித்து பட்டம் பெற்றவர்கள்.

அவர்களின் வாழ்க்கையில் அவர்கள் படித்துப் பட்டம் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தை ஒருபோதும் மறந்துவிட முடியாது என்பதையே பொன்விழா மலர் வெளியீடு அமைகிறது. மலர் வெளியீடு சிறப்புற அமைய எமது ஆசி உரித்தாகுக.

என்றும் வேண்டும் இன்ப அன்பு

**நல்லை ஆதீன முதல்வர்,**
**நல்லை ஆதீனம்.**



## எங்கள் கலைப்பீடத் தனித்துவம் மேலோங்கி விரிய வாழ்த்துக்கள்

எங்கள் செழுங்கலை நியமமாகிய யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழா ஆண்டைப் பூர்த்தி செய்திருக்கின்றது. ஈழத்தமிழ் மக்களின் தலையாய உயர் கல்விக்கூடம் எனும் பெரும் தகைமையோடு 1974 ஆம் ஆண்டு இலங்கைப் பல்கலைக்கழகத்தின் வளாகமாக ஆரம்பிக்கப்பட்ட யாழ்ப்பாண வளாகம் பின்னர் 1978 ஆம் ஆண்டு பல்கலைக்கழகமாக தரமுயர்த்தப்பட்டது.

எமது பல்கலைக்கழகத்தின் தாய்ப்பீடம் மட்டுமன்றிப் பல வழிகளிலும் தனித்துவமான பீடமுமான கலைப்பீடத்திலும் பொன்விழா ஆண்டில் பழைய மாணவர்கள் சங்கம் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டமை ஒரு கனதியான அடைவாகும். இன்று கலைப்பீடப் பழைய மாணவர்கள் மிகச் சிறப்பாகத் தங்கள் பீடத்தின் பொன்விழாவைக் கொண்டாடுவது மகிழ்ச்சிக்குரியது. அந் நிகழ்வின் ஒரு அங்கமாகக் கலைப்பீடத்தின் பல்பக்கப் பரிமாணங்களைக் காண்பிக்கும் ஆவணமாக ஒரு மலரை வெளிக்கொணர்வது பாராட்டுக்குரியது. அம் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்கக் கிடைத்த வாய்ப்பைக் காலம் தந்த பரிசாக நினைந்து மகிழ்கிறேன். இத் தருணத்தில் கலைப்பீடத்தின் தனித்துவங்கள் சிலவற்றை அழுத்தமாகப்பதிவுசெய்ய விரும்புகிறேன்.

**பேராசிரியர் சி.சிறிசற்குணராசா,**
**துணைவேந்தர்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



## இந்து கற்கைகள் பீடாதிபதியின் வாழ்த்து

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பொன்விழா ஆண்டில் பயணித்துக் கொண்டிருக்கும் இவ் வேளையில் பழைய மாணவர்கள் ஒன்றிணைந்து வெளிக்கொணரும் வரலாற்று நூற்றொகுதிக்கு இந்துக் கற்கைகள் பீட பீடாதிபதி எனும் நிலையில் வாழ்த்துச் செய்தியினை வழங்குவதனையிட்டுப் பெருமிதமடைகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவுத்திருக்கோவிலாக விளங்கும் அதேவேளை சேர்.பொன்.இராமநாதன் அவர்களது அபிலாஷைகளை நிறைவுசெய்யும் நோக்கமாகச் செயலாற்றி வருகின்றது. பல பரிணாமத்தில் எண்ணிறைந்த பட்டதாரிகளை உருவாக்கிய கல்விக்கூடத்தின் பழைய மாணவர்கள் என்பதில் நாம் பெருமிதம் அடைகின்றோம். யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பரந்த பரிணாம வளர்ச்சிக்கான பாதையில் பழையமாணவர்களது நன்றியறிதல்களுடன் கூடிய செயற்பாடு மிகவும் புனிதமானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தாயின் குழந்தைகள் எனும் வகையில் உலகளாவிய ரீதியில் பரந்த நிலையில் ஒன்றுகூட்டிச் செயலாற்றுவது மிகுந்த மகிழ்ச்சிக்குரியதாகும்.

**பிரம்மஸ்ரீ .ச. பத்மநாபன்,**
**பீடாதிபதி, இந்துக் கற்கைகள் பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**



## வாழ்வளித்த அன்னைக்கோர் பொன்விழா வாழ்த்து

நல்லதொரு குடும்பத்தினைப் பல்கலைக்கழகத்திற்கு ஒப்பிடுவர் ஆன்றோர். பல்கலைக்கழகம் என்பது நல்வாழ்வுக்கு அடித்தளமாகும். நல்ல குடும்பம் போல் தன் சேவையாலும் செயல்களாலும் உருப்பெற்று நல்வாழ்வழிக்கும் அன்னையாகும். ஈழத்தமிழ் பேசும் மக்களின் கல்வி, கலாசார, பண்பாட்டு மையமாக அமையப்பெற்று இன்று இலங்கை மக்கள் அனைவரதும் கல்விக்கும் வாழ்வுக்கும் களமாக வளர்ந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழகமானது அகவை ஐம்பதைக் கடந்து பொன்விழாக் காண்பது கற்றோர் மத்தியிலும் சமூகச் சான்றோர் மத்தியிலும் மட்டில்லா மகிழ்ச்சியளிக்கின்றது. பல்கலைக்கழகத்தின் கலைப்பீடத்தின் பல்லாயிரக்கணக்கான பழைய மாணவர்களின் சங்கமமாக முகிழ்ந்த பழைய மாணவர் சங்கத்தினால் முன்னெடுக்கப்படுகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அன்னையின் பொன்விழா மகத்தான நன்றி வெளிப்பாடாகும்.

எல்லாச் செழிப்பும் பெற்று வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்திட வாழ்வளித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக அன்னைக்குப் பொன்விழா வாழ்த்து மலர்களைக் காணிக்கையாக்கி மகிழ்கின்றோம்.

**கலாநிதி செல்லத்துரை சேதுராஜா,**
**விழா நிதிக்குழு.**



## யாழ்.ஆயரின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் பொன்விழாக் காணும் வேளை கலைப்பீடப் பழைய மாண வர்கள் வெளியிடும் சிறப்பு மலருக்கு எனது வாழ்த்துக்களையும் ஆசியையும் தெரிவித்துக் கொள்கின்றேன். யாழ்ப்பாணத்துக்கு ஓர் பல்கலைக்கழகம் வேண்டும் என்ற வேண்டுகோள் பல்லாண்டு காலமாகப்பல அறிஞர்களால் முன்வைக்கப்பட்டிருந்தது. 1974 ஆம் ஆண்டில் இலங்கைப் பல்கலைக் கழகத்தின் ஓர் வளாகமாக இது உதயமாகி, 1979 இல் ஓர் தனிப் பல்கலைக் கழகமாக உயர்வு பெற்றமை எம் அனைவருக்கும் மட்டற்ற மகிழ்ச்சியைத் தருகிறது. யாழ்ப்பாணத்து இளைய தலைமுறை, தாயக மண்ணிலேயே உயர் கல்வி பயின்று பட்டம் பெற்றுக்கொள்வதோடில்லாமல் தமது சொந்தப் பிரதேச வளங்களைப் பற்றிய ஆய்வுகளைச்செய்து பிரதேச வளர்ச்சிக்கும், உயர்ச்சிக்கும், வளங்களின் மேன்மைக்கும் வழிசமைக்கும் உயர் கல்வி நிறுவனமாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் திகழ்வது பாராட்டுக்குரியது.

**கலாநிதி.ஜஸ்ரின் பேர்னாட் ஞானப்பிரகாசம் ஆண்டகை,**
**ஆயர், யாழ்.மறைமாவட்டம்.**



## உறவுகள் தொடரட்டும்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பொன்விழா நிகழ்வு தொடர்பாக இப் பல்கலைக்கழகத்தின் மானிட கலைப்பீடத்தில் ஆரம்ப காலத்தில் கற்ற மாணவர்களால் வெளியிடப்படும் சிறப்பு மலருக்கு வாழ்த்துச் செய்தி எழுதுவதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகிறேன்.

இப் பட்டதாரிகள் பல்வேறு உயர் பதவிகள் வகித்து இன்று ஓய்வு நிலையில் இருக்கின்ற பொழுதும் தங்களது வாழ்வுக்கும் வளத்துக்கும் பங்களித்த பல்கலைக் கழகத்தை நினைவு கூருவது பெரும் பாராட்டிற்குரியது. மேலும் எங்கிருந்தாலும் எந் நிலையிலும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகச் செயற்பாடுகளிலும், வளர்ச்சியிலும் ஈடுபாடு கொண்டவர்களாக இருந்து வருவதும் மகிழ்ச்சிக்குரியது. இவர்களின் ஒன்றுகூடல் நிகழ்வு பழைய பசுமையான நினைவு களை மீட்கவும், உறவுகளைத் தொடரவும் வழி வகுக்கும். இந்த ஒன்று கூடல் நிகழ்வு மகிழ்ச்சியாகவும், வெற்றியாகவும் நடக்க எனது மனம் நிறைந்த வாழ்த்துக்கள்.

**வாழ்நாள் பேராசிரியர். பொன்.பாலசுந்தரம்பிள்ளை,**
**முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**



## சித்தமருத்துவ பீடாதிபதியின் வாழ்த்து

ஆயகலைகள் அனைத்தையும் அள்ளித் தருகின்ற யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் உருவாகிய கலைப்பீடமானது 50 வருடங்களைக் கடந்து யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்துடன் இணைந்து எமது பாரம்பரியத்தையும் கலாசாரத்தையும் பண்பாட்டினையும் பேணிப் பாதுகாக்கும் கலைப்பீடமானது பொன்விழாக் காணும் இவ்வழகிய தருணத்தில் சித்த மருத்துவப்பீடாதிபதி என்ற வகையில் பெருமகிழ்வடைகின்றேன். ஏனெனில் சித்த மருத்துவமானது தமிழர்களின் கலை, கலாசாரம், பண்பாட்டுடன் பின்னிப்பிணைந்து விளங்குகின்றது.

கலைப்பீடமானது எமது மொழிக்குரிய, கலைக்குரிய, கலாசாரத்திற்குரிய, பண்பாட்டிற்குரிய அரிய பொக்கிஷங்களையும் சுவடுகளையும் கொண்டு விளங்குகின்றது. அவற்றை அழியவிடாது பேணிப் பாதுகாத்து மேலும் பல புதிய பீடங்களையும் கல்வியலாளர்களையும் உருவாக்க வேண்டும் என இறைவனைப் பிரார்த்திப்பதோடு சித்த மருத்துவப் பீடாதிபதி என்ற வகையில் எனது வாழ்த்துக்களையும் ஆசிகளையும் தெரிவித்துக்கொள்கிறேன்.

**விவியன் சத்தியசீலன், பீடாதிபதி,**
**சித்தமருத்துவத்துறை, யாழ்.பல்கலைக்கழகம்.**



## வாழ்த்தி மகிழ்கின்றேன்

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட பழைய மாணவர்கள் கலைப்பீடத்தின் 50 ஆண்டுகளின் சாதனைகளை வேரிலிருந்து விழுது வரை ஒற்றிணையும் பொன்விழாவாக மூன்று நாட்களில் (26-28 சித்திரை 2025) கொண்டாடுகிறார்கள். யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தின் பழைய மாணவனாகிய நான் 1978-1982 இல் என்னுடன் கல்விகற்ற இலங்கையிலிருக்கும் எனது நண்பர்களுடன் இணைந்து சில உதவித்தொகை நிதியங்களை கலைப்பீடத்தில் உயர்கல்வியை முடிக்க நிதித்தேவையுடைய மாணவர்களுக்கு உருவாக்கும் பணியில் ஈடுபட்டுள்ளோம். இதற்காக ரூ.20 மில்லியன் இலக்காக நிர்ணயித்துள்ளோம். தவிர ஒவ்வொன்றும் 13 இலட்சம் பெறுமதியான ஆறு உதவி நிதியங்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இப் பெரும் முயற்சிக்கு ஒத்துழைத்த அனைவருக்கும் நன்றி கூறுவதுடன் பொன்விழா சிறப்புற எனது மனமார்ந்த வாழ்த்துக்கள் உரித்தாகுக.

**பேராசிரியர் பா.பாலச்சந்திரன்**
**மொனாஷ் பல்கலைக்கழகம், மலேசியா.**



## பொன்விழா வாழ்த்துச் செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் 1974 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. ஏறத்தாள 50 வருடங்களில் 40,000 பட்டதாரிகளை உருவாக்கியுள்ளது. 30 வருடகால யுத்தத்திலும் பல்கலைக்கழகம் தொடர்ந்து இயங்கியமை சிறப்பிற்குரியது. கல்விக்குப் புகழ் பெற்ற யாழ்.மண் தனது இடத்தை மீண்டும் தக்கவைத்துக்கொள்ள இந்தப் பொன்விழா உந்துசக்தியாக அமையும் என்பதில் எந்தவித சந்தேகமும் இல்லை. முதன்முதலாக 50 வருட பொன்விழாவுடன் கலைப்பீட பழையமாணவர் சங்கத்தை உருவாக்கியமை மகிழ்ச்சிக்குரிய விடயமாகும். இப்பழைய மாணவர் சங்கம் சிறப்பாக இயங்க வாழ்த்துக்கள். இப் பழைய மாணவர் சங்கம் பல்கலைக் கழகத்தில் கற்கும் மாணவர்களுக்கு கல்வி கற்பதற்குத் தேவையான உதவிகளைச் செய்வதற்கும், ஆளுமையை வளர்ப்பதற்கான பயிற்சிகளை வழங்கப்படுவதற்கும் தொழில் வாய்ப்புக்களை உருவாக்குவதற்கும் பலமான தூணாக அமையவேண்டுமென்பது எனது அவா.

**மிதிலைச்செல்வி ஸ்ரீபத்மநாதன்**
**தலைவர், கலைக்குழு.**

(C-2803)



## பௌத்த துறவியின் ஆசிச்செய்தி

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பழைய மாணவர் சங்கத்தின் பொன்விழா மலருக்கு ஆசிச் செய்தி எழுதுவதில் அகமகிழ்வு அடைகின்றேன். யாழ்ப்பாணப் பல்கலைகழகம் ஆரம்பிக்கப்பட்ட காலத்தில் உருவான கலைப்பீடப் பழைய மாணவர் சங்கமானது, கடந்த காலங்களில் பல இன்னல்களைச் சந்தித்து தனது 50 ஆவது ஆண்டு பூர்த்தியைக் கொண்டாடுகின்ற இவ் வேளை, இவ்விழா சிறப்புறவும், பொன்விழா மலர் சிறந்த முறையில் வெளிவரவும் வாழ்த்துவதோடு, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் மென்மேலும் வளர்ந்து தாய் நாட்டிற்குத் தம்மாலான சேவையினைச் செய்ய வேண்டும் என, பௌத்த தர்மத்தில் ஆசீர்வாதம் செய்கின்றேன்.

**விகாராதிபதி,**
**நாகவிகாரை, யாழ்ப்பாணம்.**





## மதிப்பளிப்புக் குழுத் தலைவரின் வாழ்த்துச் செய்தி

தரணியெங்கும் பரந்திருக்கும் தமிழர்களின் தனிப்பெரும் அடையாளங்களில் ஒன்றாகத் திகழும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தாய் தனது ஐம்பதாவது ஆண்டை நிறைவு செய்து பொன் அகவைக் கொண்டாட்டங்களில் களித்திருக்கும் இந் நேரத்தில், பல்கலைக்கழகத்தின் முதற் பீடங்களில் ஒன்றாகவும் முதன்மையான பீடங்களில் ஒன்றாகவும் புகழ்பரப்பிக் கொண்டிருக்கும் கலைப்பீடத்தின் பழைய மாணவர்களால் முன்னெடுக்கப்படும் "பொற்கலைச் சங்கமம் - வேரிலிருந்து விழுது வரை" நிகழ்வுக்கு, அதன் மதிப்பளிப்புக் குழுமத் தலைவர் என்ற கோதாவில் வாழ்த்துச் செய்தி வரைவதில் மட்டற்ற மகிழ்ச்சி.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடம் பல்கலைக்கழக வரலாற்றோடு பின்னிப்பிணைந்து ஐம்பது ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்து நிற்கிறது. அதன் பரிணாம வளர்ச்சியிலும், வெற்றியிலும் பங்கெடுத்தவர்கள் பலர். எங்கள் உயிரோடு கலந்து, உணர்வோடு பிணைந்து நிற்கும் அந்தப் பெருமையை நாம் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது. ஆனாலும், அதன் ஒவ்வொரு கணத்திலும் தோளோடு துணை நின்றுழைத்தவர்களை மறந்து விடவும் முடியாது. அந்த வகையில் இன்றைய தினத்தில் மதிப்பளிக்கப்படும் ஓய்வுநிலை விரிவுரையாளர்கள், போதனைசார் - போதனைசாரப் பணியாளர்கள் அனைவரும் போற்றுதற்குரியவர்கள்.

**திருமதி. சிவராணி சிறிசற்குணராஜா**
**சிரேஷ்ட விரிவுரையாளர், கலைப்பீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**



## பொன்விழா சிறக்க வாழ்த்துக்கள்

யாழ்.பல்கலைக்கழகம் ஐம்பது ஆண்டுகளை வெற்றிகரமாகக் கடந்துள்ள நிலையில், உலகெங்கும் உள்ள பழைய மாணவர்களும் பீடங்களும் பொன்விழா நிகழ்வுகளை இலகு விமர்சையாகக் கொண்டாடி வரும் இந்த வேளையில், ஆரம்பப் பீடங்களுள் ஒன்றாகிய கலைப்பீடமும் அதன் பழைய மாணவர்களும் இணைந்துள்ளமை மகிழ்ச்சி அளிக்கின்றது.

நிலத்திலும் புலத்திலும் பரந்து வாழ்கின்ற கலைப்பீடப் பழைய மாணவர்களின் இடைவிடாத முயற்சியாலும் தாம் படித்த, தமது தற்போதைய உயர்நிலைக்கு காரணமான தமது பல்கலைக்கழகத்தாயின் மீதுள்ள நன்றி உணர்வினாலும் இவ் விழாவிற்கான நிதி திரட்டப்பட்டதோடு, கலைப்பீடத்தில் கல்விபயிலும் மாணவர்களின் நிதித்தேவைகளைப் பூர்த்தி செய்யும் முகமாகப் புலமைப் பரிசில் கொடுப்பனவு வெற்றிகரமாக நிதியங்களை உருவாக்கும் செயற்பாடும் வெற்றிகரமாக முன்னெடுக்கப்பட்டுள்ளது. ஈகைக் குணம் கொண்ட கலைப்பீடப் பழைய மாணவர்களின் தனிப்பட்ட மற்றும் ஆளணி ரீதியான பங்களிப்பின் மூலம் இதுவரை பதினைந்து மில்லியன் ரூபா புலமைப் பரிசிலுக்காகத் திரட்டப்பட்டுள்ளதோடு, இவ்வருட இறுதிக்குள் இருபது தொடக்கம் இருபத்தைந்து மில்லியனை எட்ட முயற்சிகளும் எடுக்கப்பட்டுள்ளன.

கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் ஆரம்பிக்கப்பட்டு ஒரு வருடத்தைக் கூட எட்டாத நிலையில் இத்தகைய பிரமாண்டமான பொன்விழா நிகழ்வுகளை ஒழுங்கமைக்கவும், புலமைப்பரிசில் நிதியங்களை உருவாக்கவும் உதவிய அனைத்து நல்ல உள்ளங்களுக்கும் கலைப்பீடப் பழைய மாணவர் சங்கத்தின் பொருளாளர் என்ற வகையில் நன்றி கூறக் கடமைப்பட்டுள்ளேன். மேலும் இப் பொன்விழா நிகழ்வுகள் எதிர்வரும் 26 ஆம் , 27 ஆம், 28 ஆம் திகதிகளில் சிறப்புற நடைபெற எனது வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**திருமதி தா.கிருஷாந்தன்,**
**பொருளாளர்.**

(C-2803)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ...வும் பொற்கலை மலர் வெளியீடும் –சிறப்பு மலர்

## உலமா சபை செயலாளரின் ஆசிச்செய்தி



இலங்கையின் மணிமுடியென விளங்கும் யாழ் மண்ணில் எழுச்சி கொண்டு விளங்குகின்ற யாழ் பல்கலைக்கழகம் தனது பொன்விழா நிறைவை முன்னிட்டு, கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் வெளியிட இருக்கும் மலருக்கு ஆசிச் செய்தி வழங்கும் சந்தர்ப்பம் கிடைத்தமையை எண்ணி இறைவனைப் புகழ்வதுடன் பெருமகிழ்ச்சியடைகின்றேன்.

கம்பீரமான தோற்றம், வீறுகொண்ட பார்வை, எண்ணங்களின் வேகம் என ஆளுமைமிக்க ஆசிரியர்களின் வழிகாட்டலுடன் பல்வேறு குணாம்சங்கள் பொதிந்து காணப்படும் யாழ்ப்பாணப்பல்கலைக்கழகம், இன்று போல் என்றும் எண்ணிலடங்கா மலர்கள் செழிப்புடன் பிரகாசிக்கும், மானிடர்கள் விரும்பும் நந்தவனம்போல் என்றும் வெற்றிநடை போட, இப்பொன்னாளில் மனமார்ந்த வாழ்த்துக்களை மீண்டும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**மௌலவி அல்ஹாபிழ் ஏ.எம்.றழீம் (மக்கி),**
**செயலாளர் அகில இலங்கை ஜம்மிய்யதுல் உலமா,**
**யாழ்ப்பாணம், கிளிநொச்சி மாவட்டக் கிளை.**



## காண்பிய ஆற்றுகைக் கலைகள் பீட பீடாதிபதியின் வாழ்த்து



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழா வைபவமான ஐம்பது ஆண்டுகளின் பயணத்தை கொண்டாடும் இந்நேரம், ஒட்டுமொத்த பல்கலைக்கழக சமூகத்திற்கும் பெருமையின் தருணமாகும். நமது பல்கலைக்கழகம் ஆரம்பத்திலிருந்து கல்வி மற்றும் கலாசார வளர்ச்சியை முன்நிறுத்தி செயற்பட்டுள்ளது. இதன் பலன் இன்று உலகம் முழுவதும் பல துறைகளில் முதன்மை பெற்றுள்ள நமது மாணவர்களினூடே வெளிப்படுகிறது. அவர்கள் வெற்றி, யாழ்ப்பாணப் பல்கைக்கழகத்தில் பெற்ற கல்வியின் தரத்தையும் வலிமையயும் காட்டுகிறது.

ஒரு கல்வி நிறுவனத்தின் வளர்ச்சி நேர்மறையான, நேரே செல்லும் பாதையாக அல்ல; அதில் வளர்ச்சிக் காலங்களில் இடையிடையே சவால்கள் இருக்கக்கூடும். நமது பல்கைக்கழகத்தின் வலிமை, இனப்பிரச்சினை, கொரோனா பெருந்தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி போன்ற சோதனைகளால் பரிசோதிக்கப்பட்டது. இவை அனைத்தையும் தாங்கி, வலுவான கல்வி அடித்தளத்துடன், யாழ்ப்பாணப் பல்கைக்கழகம் இன்றும் வளர்ந்து கொண்டு, மாற்றம் அடையும் கல்வி உலகத்துடன் விரைவாகச் செயற்பட்டு வருகின்றது.

இந்த பொன்விழா, வெற்றிகளையே அல்லாமல் எதிர்கால பாதையையும் சிந்திக்க ஒரு முக்கிய தருணமாகும். எழுச்சி, நவீனத்துவம் மற்றும் சமூக பங்களிப்பு ஆகியவற்றில் தொடர்ந்து முன்னோடியாக இருக்க எடுத்துக் கொண்டுள்ள உறுதிமொழியை நினைவூட்டும் திசை காட்டியாக அமையட்டும்.

**பேராசிரியர் சா.சிவரூபன், பீடாதிபதி,**
**சேர்.பொன்னம்பலம் இராமநாதன்**
**காண்பிய ஆற்றுகைக் கலைகள்பீடம், யாழ்.பல்கலைக்கழகம்.**

## பொலிவுறு பொன்விழாவை போற்றுவோம்



தமிழ் மக்களின் உயர் கல்வி வாய்ப்புக்கான விரிகளத்தை ஏற்படுத்தும் வேணவாவோடு ஆரம்பிக்கப் பட்ட யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் தனது பொன்விழா ஆண்டைச் செழிப்புறக் கொண்டாடிக்கொண்டிருக்கிறது. பல்கலைக்கழகத் தின் பல பகுதியினரும் கொண்டாடும் பொன்விழா வைக் காட்டிலும் கலைப்பீடம் கொண்டாடும் பொன்விழா மேலும் ஒருபடி சிறப்பானது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட போதே கலைப்பீடமும் ஆரம்பிக்கப்பட்டுவிட்டது. அந்த வகையில் கலைப்பீடத் திற்கும் இது பொன்விழா ஆண்டே. கலைப்பீட பழைய மாணவர் சங்கம் பொன்விழா ஆண்டிலேயே ஆரம்பிக்கப்பட்டு அதன் முக்கிய செயற்பாடுகளில் ஒன்றாகப் பொன்விழாக் கொண்டாடுவது என்றும் அதன் முக்கிய அங்கமாகப் பொன்விழா மலர் ஒன்றை வெளியிடுவது என்றும் தீர்மானிக்கப்பட்டது.

தனியே பழைய மாணவர் சங்க நிர்வாகக்குழு மட்டுமின்றி அதனோடு இணைந்த வகையில் பொன்விழா மலர்க்குழு ஒன்று அமைக்கப்பட்டு அவர்களின் காத்திரமான செயற்பாடுகளால் இன்று பொன்விழா மலர் பொலிவுற வெளியாகின்றது. இந்நேரத்தில் எனது வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

**அ.பௌநந்தி, செயலாளர்,**
**முதுநிலை விரிவுரையாளர்,**
**கல்விப்பீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்.**

## செஞ்சொற் செல்வரின் ஆசிச்செய்தி



ஈழத்தமிழர்களின் உன்னத அறிவாலய மாகத் திகழ்வது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம். இப் பல்கலைக்கழகத்தின் பொன்விழாக் குறித்து வாழ்த்துவதில் மிகுந்த ஆனந்தம் அடைகிறேன். 1974 ஆம் ஆண்டு சில பெரியவர்கள் எடுத்த முயற்சியால் யாழ்.வளாகம் உருவாகியது. யாழ்.வளாகம் உருவாக உழைத்தவர்கள் என்றும் நன்றிக்குரியவர்கள். வளாகத்தின் முதலாவது தலைமகன் முதல் இன்றைய தலைமகன் வரை அயராது பாடுபட்டார்கள். யாழ்.வளாகம் பல்கலைக்கழகமாக உயர்வு கண்டபோது ஈழத்தமிழர்கள் பெருமை கொண்டனர்.

சேர்.பொன்னம்பலம் இராமநாதனின் புனிதமான சொத்துப் பல்கலைக்கழகமாக உயர்ந்து நிற்பது சிறப்பே. யாழ்ப்பாணப் பல்கலைக்கழக வளர்ச்சியில் அயராது உழைத்த துணைவேந்தர்கள், பேரவை உறுப்பினர்களாக வழி நடத்திய பெரியவர்கள், பேராசிரியப் பெருமக்கள், விரிவுரையாளர்கள், உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அத்தனை பேரையும் நீள நினைந்து வாழ்த்துகின்றேன்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக கலைப்பீடத்தில் கற்று இன்று பழைய மாணவராகி சீரோடும் சிறப்போடும் வாழ்பவர்கள் ஒன்றிணைந்து நடத்தும் கலைப்பீடப் பொன்விழா நினைவாக ஆவணமலர் வெளியிடுவது மிகவும் பாராட்டுக்குரியது.

**கலாநிதி. ஆறு. திருமுருகன்.**
**தலைவர்,**
**ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தானம். தெல்லிப்பழை.**

## பெறுமதியான தருணம்



எங்கள் கல்விப்பாரம்பரியத்தின் செழுங்கலை நியமமாய் அமையப் பெற்ற யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் பொன்விழாவை ஆராதிக் கும் இத் தருணம் பெறுமதியானது. பல்கலைக்கழகத்தின் தொடக்க கால முதலாய் அதன் முழுதளாவிய மேம்பாட்டில், மனிதப் பண்பியல், சமூக அறிவியல் என விரிந்த எங்கள் கலைப்பீடத்தின் பங்கு எல்லை யிலாதது. இந்த வகையில் கலைப்பீடத்தின் விழுதுகளான பிள்ளைகள் கூடி எடுக்கும் இந்தக் கொண்டாட்டம் அர்த்தமும் அழகும் நிறைந்தது.

தேசப்பரப்பிலும் தேசங்கடந்தும் தம் மேலான பணிகளால் பல்கலைக்கழக அன்னைக்குப் பெருமை சேர்க்கும் பிள்ளைகளின் இந்த ஒன்று கூடலானது முக்கியமான ஒரு வரலாற்று நிகழ்வென லாம். சென்ற காலத்தின் செழுமையான அனுபவங்களை மீட்டிக் கொள்ளவும் நிகழ்காலத்தினை வலுப்படுத்தி எதிர்காலத்தை மென்மேலும் செப்பனிடவும் வாய்த்த பெரும்பேறு என்பேன்.

**பேராசிரியர் என். சண்முகலிங்கன்,**
**முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.**

## முகாமைத்துவ பீடாதிபதியின் வாழ்த்துச் செய்தி



முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிகவியல் பீடத்தின் பீடாதிபதி என்ற வகையில் யாழ்ப்பாணப் பல் கலைக் கழகத்தின் கலை மற்றும் கலைப்பீட பழைய மாணவர் சங்கத்தின் ஏற்பாட்டில் பொன்விழாக் கொண்டாட்டங்கள், பொன் விழா இதழ் வெளிவரும் இந்நேரத்தில் எனது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

கல்வி, ஆராய்ச்சி, கலாசார செறிவூட்டல் மற்றும் சமூக ஈடுபாடு ஆகியவற்றில் ஐம்பது ஆண்டுகளாக இணையற்று விளங்கும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் அறிவுத் திறனை, படைப்பாற்றலை, தலைமைத்துவத்தை வளர்ப்பதிலும் விஞ்சி நிற்கும் இத்தருணத்தில், எமது மனமார்ந்த வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**பேராசிரியர் என்.கெங்காதரன், பீடாதிபதி,**
**முகாமைத்துவக் கற்கைகள் மற்றும் வணிகபீடம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

## தலைவரின் வாழ்த்துச் செய்தி



அகவை ஐம்பதில் கால் பதிக்கும் கலைப்பீடத்தின் பொன் விழாமலர் "பொற்கலை" யினை வாழ்த்துவதில் அகமகிழ்வடைகிறேன். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகத்தின் அகவை ஐம்பதை வாழ்த்துவதிலும் பெருமகிழ்வடைகிறேன். இவ் அரை நூற்றாண்டுப் பயணத்தில் கலைப்பீடமும் தனது அகவை ஐம்பதைக் கடப்பதையிட்டு அகமகிழ்ந்து பாராட்டுகின்றேன். பொன்விழா மலர் பல வரலாற்றுப் படைப்புக்களையும் கலைப்பீட சாதனைகளையும் கடந்த ஐந்து தசாப்த அனுபவங்களையும் தன்னகத்தே கொண்ட ஒரு வரலாற்றுப்படைப் பாகும். இம் மலர் சிறப்புற வெளிவர உழைத்த நல் உள்ளங்கள் அனைவரையும் பாராட்டுவதோடு, விசேடமாக அதன் தலைவர் திரு அ.அகிலதாஸ் அவர்களின் ஒப்பற்ற உழைப்பையும் பாராட்டாமல் இருக்க முடியாது. கலைப்பீடத்தின் ஐம்பதாவது அகவையில் பிறந்த கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம் அதன் நூற்றாண்டு காண வீறு நடை போட வேண்டுமென்று வாழ்த்தி நிற்கிறேன்.

**இம்மானுவல் ஆனல்ட்,**
**தலைவர், கலைப்பீட பழைய மாணவர் சங்கம்,**
**யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.**

## வட மாகாண ஆளுநரின் வாழ்த்துச் செய்தி



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடம் தனது 50 ஆம் ஆண்டு விழாவைக் கோலாகலமாகக் கொண்டாடுகின்ற இந்தச் சிறப்பான தருணத்தில் குறித்த கலைப்பீடத்தில் கல்வி பயின்ற மாணவர்களினால் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள பொன்விழா நிகழ்வில் வெளிவரவிருக்கும் மலருக்கு வாழ்த்துச் செய்தி வழங்குவதில் பேருவகையடைகின்றேன்.

இம் மலரானது யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் கடந்த காலத்தின் பெருமைகளையும், எதிர்கால நோக்குகளையும் வெளிப்படுத்தும் ஓர் அழகிய ஆவணமாக இருக்கும் என நான் உறுதியாக நம்புகிறேன். இவ்விழா சிறப்பாக நடைபெறவும் பொன்விழா மலர் சிறப்புற வெளிவரவும் எனது இதயப்பூர்வமான வாழ்த்துக்களைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

**நா.வேதநாயகன்,**
**ஆளுநர், வடக்கு மாகாணம்.**

## கலைப்பீடாதிபதியின் வாழ்த்து



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் கலைப்பீடம் தாய்ப் பல்கலைக் கழகத்துடன் இணைந்து தனது பொன் அகவையைக் கொண்டாடுகின்றது. ஈழத் தமிழ்ச் சமூகத்தின் உயர்கல்விமையப்புள்ளியாக யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தினதும் கலைப்பீடத்தினதும் வளர்ச்சி ஐம்பது ஆண்டுகளைக் கடந்து இன்று அவற்றின் பல்பரிமாண ஆற்றுகையை, காலச் சவால்கள் கடந்த வகிபங்கினை நிரூபித்து நிற்கிறது.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகக் கலைப்பீடத்தின் நீண்ட வரலாறு பல்லாயிரக்கணக்கான ஆளுமைகளைத் துறைகள் பல சார்ந்து உருவாக்கி உலகிற்கு அளித்த பெருமையைக் கொண்டது. இன்று தாயகத்திலும் பல்வேறு தேசங்களிலும் வாழும் கலைப்பீடப் பட்டதாரிகள் தமது உயர்வின் வெளிப்பாடாகக் கொண்டிருக்கும் பூரிப்பும் தன்னம்பிக்கையும் அளவிடமுடியாத ஆத்ம வலுவாகப் பீடத்தை இன்னும் செழிப்பான தடங்களை உருவாக்கும் விளைநிலமாக மாற்றிக்கொண்டிருக்கின்றது.

இந்தச் சூழலில் பொன்விழாவை முன்னிட்டு கலைப்பீடப் பழைய மாணவர்கள் முன்னெடுக்கும் நிகழ்வுகளின் ஓர் அங்கமாக வெளியிடப்படும் பொன்விழா மலருக்கான வாழ்த்துக்களைத் தெரிவிப்பதில் மட்டற்ற மகிழ்ச்சியடைகின்றேன்.

**பேராசிரியர் சி. ரகுராம்,**
**பீடாதிபதி, கலைப்பீடம்,**
**யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.**

## இதயம் நிறைந்த வாழ்த்துக்கள்



ஈழத்தமிழர்களுக்கு உயர்கல்வியை வழங்கும் உயரிய சிந்தனையுடன், கற்றறிந்த கல்விமான்களின் தூரநோக்கோடு, 1974 ஆம் ஆண்டு பிரசவித்த இலங்கைப் பல்கலைக் கழகத்தின் யாழ்ப்பாண வளாகம், 1978 ஆம் ஆண்டு யாழ்.பல்கலைக் கழகமாக மடியில் தவழ்ந்தது. அது தனது ஐம்பதாம் ஆண்டு அகவை நிறைவில் பொன்விழாக் காண்பதையிட்டு மிகவும் மகிழ்கின்றேன்.

பல்கலைக்கழகத்தின் ஆணிவேராக ஊன்றிய கலைப்பீடத்தையும் அதனை இயங்குநிலைப்படுத்திய பேராசான் களான பேராசிரிய அமரர்கள் சு.வித்தியானந்தன், பேராசிரியர் க.கைலாசபதி வாழும் கலாநிதி கா.இந்திரபாலா போன்றோரின் கற்பித்தலில் மாணவனாயிருந்தவன் என்ற பெருமிதத்தையும் நினைத்து மகிழ்கிறேன்.

இப்பேராசான்களின் ஆளுகை வழியில், பழையமாணவர் பொன்விழாக்குழுவில் இணைந்து, மலர்க்குழுவின் தலைவராகச் செயற்படுவது எனக்குக் கிடைத்த பெரும் பாக்கியமாகும். பொன்விழாவை முன்னிட்டு வெளியிடப் படும் "பொற்கலை" மலர், சிறந்த ஆக்கபூர்வமான- காத்திரமானதும் கனதியுமான- கட்டுரைகளையும் கிடைத்தற்கரிய ஆவணச் சான்றுகளையும் உள்ளடக்கி விரிகின்றது.

இம்மலர் நான்கு மதத்தலைவர்களின் ஆசியுடன் விழித்து, பதினைந்து வாழ்த்துரைகள், இருபத்தொன்பது பல்கலைக்கழக வரலாறு சார்ந்த கட்டுரைகள், இருபத்தாறு பல்துறைசார் ஆக்கங்கள், நான்கு மனதுக்கு இதமூட்டும் கவிதைகள், எம்மைச்செதுக்கிய முப்பத்தொன்பது ஆசான்களின் நினைவுப் பதிவுகளுடன் நிறைவுறுகிறது. ஆகவே, இம்மலரைக் கலைப்பீடத்தின் முக்கியமான ஆவண மாகவே கருதுகிறேன்.

'பொற்கலை' மலரின் வெளியீட்டிற்குத் துணைநின்ற, என் அருமை நண்பர்கள், நண்பிகள், ஆக்கங்களை வழங்கிய கல்விமான்கள், நிதி உதவி வழங்கிய நல்லுள்ளங்கள் அனைவரையும் இதயபூர்வமான நன்றியுடன் பாராட்டி, [illegible]ழாச் சிறப்புற எனது வாழ்த்தினையும் தெரிவித்து மகிழ்கின்றேன்.

**அ.அகிலதாஸ், தலைவர், மலர்க்குழு,**
**கலைப்பீட பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

**மலர் ஆக்கம்:**
**கலைப்பீடப் பழைய மாணவர் சங்கம்,**
**யாழ்.பல்கலைக்கழகம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடமாகாணத்தின் குடித்தொகை வேறுபாடுகளும், குடியடர்த்தியும், குடிப்பரம்பலும் 1871 - 2022

03



வாழ்நாள் பேராசிரியர்.பொன்.பாலசுந்தரம்பிள்ளை
முன்னாள் துணைவேந்தர், யாழ்.பல்கலைக்கழகம்.

**அட்டவணை III இல் குடாநாட்டினதும் பெருநிலப்பகுதியினதும் குடிககணிப்பு இடை வேறுபாடுகள் 1921 - 2022 காலப் பகுதிக்குத் தரப்பட்டுள்ளன.**

| ஆண்டு | வடமாகாணம் | குடாநாடு | அதிகரிப்பு | | பெருநிலம் | அதிகரிப்பு | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | எண் | வீதம் | | எண் | வீதம் |
| 1921 | 374829 | 321743 | - | - | 52586 | | |
| 1946 | 479572 | 416694 | +94901 | +29.5 | 62872 | +10256 | +19.5 |
| 1953 | 570650 | 476483 | +59789 | +14.2 | 94167 | +31795 | +49.5 |
| 1963 | 741841 | 580299 | +183816 | +21.8 | 161042 | +66975 | +71.1 |
| 1971 | 874626 | 658187 | +77978 | +13.4 | 216439 | +54497 | +33.8 |
| 1981 | 1111468 | 765120 | +106933 | +16.2 | 346740 | +130310 | +60.2 |
| 2012 | 1059202 | 591888 | -173232 | -22.6 | 467974 | +121234 | +35.0 |
| 2022 | 1173000 | 638801 | +46919 | +7.8 | 534199 | +66225 | +14.1 |

மூலம்: இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள்

1946 ஆம் ஆண்டு வடமாகாணத்தின் குடித்தொகையில் குடாநாடு மிதமான அதிகரிப்பைக் கொண்டிருக்க, பெருநிலப் பிரதேசத்தின் குடித்தொகை வேகமாக அதிகரித்து இன்று ஏறக்குறைய மாகாணக் குடித்தொகையில் 50 % த்தைக் கொண்டுள்ளது. பெரு நிலப்பகுதியில் மலேரியா நோய் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதும் தூர்ந்துபோய் இருந்த பெரிய, நடுத்தர, சிறிய குளங் கள் சீர் செய்யப்பட்டு, குடியேற்றத் திட்டங்கள் முன்னெடுக்கப்பட்டதும், யுத்த காலத்தில் வவுனியா நகரத்தில் ஏற்பட்ட குடிப்பெருக்கமும் பெருநிலப்பகுதியின் குடித்தொகையை அதிகரித்தன. இவ்வதிகரிப்பு மாகாணக் குடித்தொகையில் உயர்வாக உள் ளது. பெரு நிலப்பகுதியில் குளநீர்ப்பாசனத்துடன் குழாய், கிணற்றுப் பாவனை, மின்சார வசதி, வீட்டுத்திட்டங்கள், போக்குவரத்து, தொலைத் தொடர்பு ஆகிய துறைகளில் ஏற்பட்ட முன்னேற்றங்களால் குடி உள்வருகை அதிகரித்துள்ளது.

மேலும் குறிப்பாக சிங்கள மக்கள் வெலி ஓயாப் பிரதேசப் பிரிவில் குடியேற்றப்பட்டதும், வவுனியா தெற்கு (சிங்களம்) பிரதேச செயலகப் பிரிவில் பல புதிய சிங்களக் கிராமங்கள் உருவாக்கப்பட்டதும் பெருநிலப் பகுதியில் மக்கள் தொகை அதிகரிப்பதற்கு காரணங்களாக இருக்கின்றன. பூநகரிக்கடல் வழிப்பாதை அமைப்பும் பெருநிலப்பகுதியின் மேற்குப் பகுதி அபிவிருத்தியை அதிகரித்துள்ளது.

குடாநாட்டின் வளர்ச்சி குறைந்து சென்றதற்கு மிகமுக்கிய காரணம் தொடர்ச்சியாக இடம் பெற்றுவந்த, வருகின்ற சர்வதேச, உள்நாட்டு இடப்பெயர்வுகளாகும்.

**அட்டவணை IV இல் யாழ்ப்பாண மாவட்டத்தின் இன்றைய பரப்பளவிற்குக் குடித்தொகை யும் குடிக்கணிப்பு வேறுபாடுகளும் காட்டப்பட்டுள்ளன.**

| ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு இடை வேறுபாடு | | மாகாணத்தின் குடித்தொகையில் மாவட்டத்தின் பங்கு |
|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | |
| 1871 | 234297 | | …….. | 8.32 |
| 1881 | 254299 | +20002 | +8.5 | 8.41 |
| 1891 | 269667 | +15368 | +6.0 | 8.45 |
| 1901 | 290255 | +20588 | +7.6 | 8.41 |
| 1911 | 321645 | +31390 | +10.8 | 8.49 |
| 1921 | 326990 | +5345 | +1.7 | 8.49 |
| 1931 | 343261 | +16271 | +5.0 | 8.63 |
| 1946 | 414836 | +71575 | +20.9 | 8.61 |
| 1953 | 470962 | +56126 | +13.5 | 8.27 |
| 1963 | 574596 | +103634 | +22.0 | 7.73 |
| 1971 | 645845 | +71249 | +13.4 | 7.38 |
| 1981 | 738836 | ++92991 | +14.4 | 6.65 |
| 2001 | 541383 | -197453 | -26.7 | 5.36 |
| 2012 | 533328 | +41995 | +7.8 | 5.56 |
| *2022 | 628657 | +45279 | +7.8 | 5.36 |

யாழ்ப்பாண மாவட்டத்தின் நிலப் பரப்பு 983.6 சதுர கிலோ மீற்றராகும். இன்றைய மாவட்ட எல்லைகளுக்கேற்ப 1871 - 1981 ஆண்டுகளுக்குரிய குடித்தொகைத் தரவுகள் கணிக்கப்பட்டு மேலே தரப்பட்டுள்ளன. 1871 - 1946 இற்கு இடைப்பட்ட 75 வருட காலத்தில் இம் மாவட்டத்தின் குடித்தொகை 77.0% அதிகரித்துள்ளது. இக் காலப் பகுதியில் தொற்று நோய்களின் தாக்கம் அதிகமாக இருந்ததால் இறப்பு வீதம் உயர்வாகவும், மக்களின் சராசரி வாழும் காலம் 50 வயதிற்கு உட்பட்டு இருந்ததும் குறிப்பிடத்தக்கன. 1946-1981ஆம் ஆண்டுக்கு இடைப்பட்ட 35 வருடங்களில் இம் மாவட்டத்தின் குடித்தொகை 78.1 வீதத்தால் அதிகரித்துள்ளது.

இக் காலப்பகுதியில் தொற்றுநோய்கள் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டதும், உணவுப் பாதுகாப்பு அரசின் உணவுப் பொது விநியோகத்திட்டத்தால் உறுதிப்படுத்தப்பட்டதும் சுகாதார வசதிகள் மேம்பட்டதும் இறப்பு வீதம் குறைவடையவும், பிறப்பு வீதம் அதிகரிக்கவும் வழிவகுத்தன.

1981 - 2012 ஆண்டுகளுக்கு இடைப்பட்ட காலத்தில் மாவட்டத்தின் குடித்தொகை 21 வீதத்தால் வீழ்ச்சி கண்டது. மாவட்டத்தின் அரசியல் மற்றும் பொரு[illegible] மோசமடைந்[illegible] 1977 ஆம் ஆண்டு பாராளுமன்றத் தேர்தலில் தனி நாட்டுக் கோரிக்கையை முன்வைத்து தமிழர் ஐக்கிய விடுதலை முன்னணி வட மாகாணத்தில் எல்லாத் தொகுதிகளிலும் வெற்றி பெற்று தனி நாட்டுக் கோரிக்கையை முன்னெடுத்தது. இதன் காரணமாக இம் மாவட்டத்தில் வன்செயல்கள், கிளர்ச்சிகள், யுத்தங்கள் இடம் பெற்றதுடன் பாரிய இடப்பெயர்வுகளுக்கு மக்கள் முகங்கொடுக்க வேண்டியிருந்தனர்.

வலிகாமம் வடக்குப் பகுதியில் உயர் பாதுகாப்பு வலய உருவாக்கம், 1991 தீவக மக்களின் இடப்பெயர்வு, 1995 ஒக்ரோபரில் வலிகாமம் இடப்பெயர்வு ஆகியனவற்றால் பெருமளவு இம்மாவட்ட மக்கள் நாட்டின் பிற பகுதிகளுக்கும், பிற நாடுகளுக்கும் சென்றனர்.

**அட்டவணை V கிளிநொச்சி மாவட்டக்கின் குடிக்கொகை. குடிக்கணிப்பு இடை வேறுபாடுகள் 1871 - 2022**

| ஆண்டு | குடித்தொகை | குடிக்கணிப்பு இடைவேறுபாடு | | மாகாணக் குடித்தொகையில் மாவட்டப் பங்கு |
|---|---|---|---|---|
| | | எண் | வீதம் | |
| 1871 | 11546 | ………… | ………… | -4.1 |
| 1881 | 10986 | -560 | -4.8 | 3.6 |
| 1891 | 9465 | -1521 | -13.8 | 3.0 |
| 1901 | 10346 | +881 | +9.3 | 3.0 |
| 1911 | 12109 | +1763 | +16.6 | 3.4 |
| 1921 | 12548 | +439 | +3.6 | 3.2 |
| 1931 | 11416 | -1132 | -9.0 | 2.8 |
| 1946 | 11893 | +477 | +4.2 | 3.6 |
| 1953 | 19901 | +8008 | +67.3 | 6.4 |
| 1963 | 37713 | +17812 | +89.5 | 4.9 |
| 1971 | 53098 | +16195 | +42.9 | 5.7 |
| 1981 | 86211 | +32303 | +59.9 | 8.2 |
| 2001 | 127300 | +41089 | +46.7 | 12.6 |
| 2012 | 112875 | +14425 | +13.3 | 10.7 |
| 2022 | 135047 | +22175 | +19.6 | 11.5 |

[illegible] இலங்கைக் குடித்தொகைக்கணிப்புகள், மாவட்டப் புள்ளிவிபரக் கைந்நூல்கள்

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பெறுகைகளுக்கான அறிவித்தல்

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்

## வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்கான பெறுகைகள்

## 2025.07.01 தொடக்கம் 2026.06.30 வரை

தலைவர், பிராந்திய பெறுகைக் குழு பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் கீழுள்ள வைத்தியசாலைகளுக்கு உலர் உணவு, சமைத்த உணவு வழங்குவதற்குத் தகமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து பொறியிடப்பட்ட விலை மனுப்பத்திரங்களினை கோருகின்றார்.

| தொ. இல | பெறுகை இலக்கம் | பெறுகையின் தன்மை | சேவைவழங்கவேண்டியநிலையம் | கேள்வி உத்தரவாதமுறி |
|---|---|---|---|---|
| 01. | DH/CM/2025/ 01 தொடக்கம் 17 வரை | சமைத்த உணவு வழங்கல் சேவை | பிரதேச வைத்தியசாலைகள் (யாழ் மாவட்டம்) | 30,000.00 |
| 02. | D/JF/2025/02 | உலர் உணவுவழங்கல் சேவை | ஆதார வைத்தியசாலை பருத்தித்துறை | 260,000.00 |
| 03. | D/JF/2025/03 | | பிரதேச வைத்தியசாலை. வல்வெட்டித்துறை | 60,000.00 |
| 04. | D/JF/2025/04 | | ஆதாரவைத்தியசாலை, சாவகச்சேரி | 250,000.00 |
| 05 | D/JF/2025/05 | | பிரதேச வைத்தியசாலை, சங்கானை | 70,000.00 |
| 06 | D/JF/2025/06 | | ஆதாரவைத்தியசாலை. ஊர்காவற்துறை | 125,000.00 |
| 07 | D/JF/2025/07 | | பிரதேசவைத்தியசாலை, நெடுந்தீவு | 20,000.00 |
| 08 | D/JF/2025/08 | | பிரதேசவைத்தியசாலை, அச்சுவேலி | 40,000.00 |
| 09 | D/JF/2025/09 | | பிரதேசவைத்தியசாலை, கோப்பாய் | 75,000.00 |

01. பெறுகை கோரலானது தேசிய போட்டி விலை பெறுகை முறைப்படி தனித்தனியாக மேற்கொள்ளப்படும்.

02. ஒப்பந்த அளிப்பு செய்வதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர் கறுப்புப் பட்டியலில் இடம்பெறலாகாது என்பதுடன் பின்வரும் தேவைப்பாடுகளையும் கொண்டிருத்தல் வேண்டும்.

அ. விலை மனுதாரர் வலிதான வியாபாரப் பெயர் பதிவினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

ஆ. அத்துடன் தொடர்புடைய வழங்கு பொருட்களின் / சேவையினை வழங்குவதற்கான அனுமதியைக் கொண்டிருத்தல் வேண்டும்.

இ. அத்துடன், வடக்கு மாகாணத்தில் தனது பதிவு செய்யப்பட்ட அலுவலகம் அல்லது கிளையினைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03. ஒப்பந்த அளிப்பிற்கு தகமை பெறுவதற்கு விலைமனுதாரர்கள் பகுதி 2 - பெறுகைத் தரவில் குறிப்பிடப்பட்ட ஆகக்குறைந்த அடிப்படைத் தகைமைகளைக் கொண்டிருத்தல் வேண்டும்.

04. ஆர்வமுள்ள விலை மனுதாரர்கள் மேலதிக தகவல்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் எனும் முகவரியிலும் 021 222 6253, 021 221 4966 எனும் தொலைபேசி இலக்கங்களினூடாகவும் பெற்றுக் கொள்ளலாம் என்பதுடன் பெறுகை ஆவணங்களை இவ்முகவரியில் வேலைநாட்களில் 09:00 மணிதொடக்கம் 15:00 மணிவரை பரிசீலிக்கமுடியும்.

05. ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியில் அமைந்த கேள்வி ஆவணங்களை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, யாழ்ப்பாணம் எனும் முகவரியில் 28.04.2025 ஆம் திகதி முதல் 19.05.2025 ஆம் திகதி வரை 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரையான காலப் பகுதியில் எழுத்து மூலமான கோரிக்கையுடன் காசாக மீளளிக்கப்படாத வைப்பாக ரூபா 3,000.00 அலுவலக காசாளரிடம் செலுத்தி அப்பற்றுச்சீட்டினை சமர்ப்பித்து பெற்றுக் கொள்ளலாம்.

06. பெறுகை ஆவணங்கள் 20.05.2025 அன்று காலை 10.00 மணிக்கு முன்பதாக பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை, சுகாதாரக் கிராமம், பண்ணை, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். விலை மனுக்கள் அனைத்தும் பெறுகை நேரமுடிவில் விலை மனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் உடனடியாகத் திறக்கப்படும் என்பதுடன் தாமதமான பெறுகைகள் நிராகரிக்கப்படும்.

07. பெறுகைக்கு முன்னரான கூட்டமொன்று திணைக்களத் தலைவரின் கீழ் குறிப்பிட்டுள்ள அமைவிடத்தில் 14 ஆம் திகதி மே மாதம் 2025 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு நடைபெறும்.

08. மேற்குறிப்பிட்ட பெறுகைப் பிணைப்பணம் ஒவ்வொரு பெறுகைக்கும் தனித்தனியாக செலுத்தப்படல் வேண்டும் என்பதுடன் இப்பிணைப்பணம் வங்கியில் செலுத்தி அவ் ஆவணத்தினை கேள்வி ஆவணத்துடன் இணைத்தல் வேண்டும்.

09. இவ் விலை மனுக்கோரலை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ அல்லது எந்தவொரு நிலையிலுமோ இப்பூரண நடவடிக்கையிலிருந்தோ எவருக்கும் நட்டஈடு எதுவும் செலுத்தாமலே இவ் விலைமனுகோரலை ரத்து செய்வதற்கு பெறுகைக்குழு தலைவருக்கு பூரண அதிகாரம் உண்டு.

**வைத்தியகலாநிதி ஆ. கேதீஸ்வரன்,**
**தலைவர், பிராந்திய பெறுகைக் குழு**
**பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனை யாழ்ப்பாணம்**
021-222-3725, 021-222-6253, 021-221-4966 தொலைநகல்: 021-222-7971
**மின்னஞ்சல்:** rdhsjaffna15@gmail .com

(அ-2604)


# வீதிகளின் திருத்த வேலைகள் தொடர்பில் கவனம் செலுத்தப்படும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு பிரதேசத்துக்கு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் நேற்று முன்தினம் வியாழக்கிழமை களப் பயணம் மேற்கொண்டு பல்வேறு பகுதிகளையும் பார்வையிட்டார்.

வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி தேவநந்தினி பாபு, வடக்கு மாகாண வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் பணிப்பாளர் எந்திரி வ.ஜெகானந்தன் முல்லை. மாவட்ட உள்ளூராட்சி உதவி ஆணையாளர் எஸ்.ஜசிந்தன். வீதி அபிவிருத்தித் திணைக்களத்தின் முல்லைத்தீவு மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் பிரதம பொறியியலாளர் எஸ். ரகுநந்தன், மாந்தை கிழக்கு பிரதேச சபையின் செயலாளர் திருமதி பா.சிவதர்சினி ஆகியோருடன் மாந்தை கிழக்கு பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் ஆளுநர் கலந்துரையாடல் நடத்தினார்.

இதன் போது மாந்தை கிழக்கு பிரதேச சபைக்கு உட்பட்ட வீதிகளின் திருத்தங்கள் தொடர்பில் கேட்டறிந்து கொண்டார்.

அதன் பின்னர் குத்துப் பால வீதி, பாலிநகர்-பாண்டியன் குளம் பிரதான வீதி அதனைத் தொடர்ந்து கரும்புள்ளியான்-மல்லாவி இணைப்பு வீதி மற்றும் சிராட்டிக்குள பிரதான குறித்த வீதிகளை நேரில் சென்று ஆளுநர் பார்வையிட்டதுடன் அவ் வீதிகள் புனரமைப்பு தொடர்பில் ஆலோசிக்கப்படும் எனத் தெரிவித்தார். மேலும், சிராட்டிக்குளம் அ.த.க பாடசாலை, பாண்டியன் குளம் மகாவித்தியாலயம் என்பனவற்றையும் ஆளுநர் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், அந்தப் பாடசாலைகளின் தேவைகளையும் அவர் கேட்டறிந்தார். (6-8)

# வீரர்களின் போர் இன்று ஆரம்பம்

## மகாஜன-ஸ்கந்த பலப்பரீட்சை







(யாழ்ப்பாணம்)

வீரர்களின் போர் என்று வர்ணிக்கப்படும் தெல்லிப்பழை மகாஜன கல்லூரி மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரிகளின் பெருந்துடுப்பாட்டப் போட்டி இன்று சனிக்கிழமை காலை 8 மணிக்கு ஆரம்பமாகவுள்ளது.

23 ஆவது ஆண்டாக இடம்பெறவுள்ள இந்தப் பெருந் துடுப்பாட்டப் போட்டி இன்று சனிக்கிழமையும் நாளை ஞாயிற்றுக்கிழமையுமாக இரு நாட்கள் சுன்னாகம் ஸ்கந்தவரோதய கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது. (3-8)

# பிரான்சிஸின் இரங்கல் திருப்பலி யாழ்.பேராலயத்தில் இன்று

(யாழ்ப்பாணம்)

யாழ்.பேராலயத்தில் திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸின் இரங்கல் திருப்பலி இன்று சனிக்கிழமை இடம்பெறவுள்ளது.

கடந்த 21 ஆம் திகதி அன்று காலமான திருத்தந்தை பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் ஆன்மா இளைப்பாறும் நிகழ்வு வத்திக்கானில் நடைபெறவுள்ளது.

திருத்தந்தை பிரான்சிஸ் அவர்களின் ஆன்ம இளைப்பாற்றிக்கான இரங்கல் திருப்பலியை யாழ். ஆயர் பேரருட் ஜஸ்ரின் ஞானப்பிரகாசம் ஆண்டகை அவர்கள் குருக்கள் துறவிகள், இறைமக்களுடன் இணைந்து யாழ். பேராலயத்தில் இன்று காலை 9.30 மணிக்கு ஒப்புக் கொடுக்கவுள்ளார்.

அதேவேளை யாழ். மறை மாவட்டத்தில் உள்ள அனைத்து ஆலயங்களிலும் திருத்தந்தை பிரான்சிஸிக்காக இரங்கல் திருப்பலி ஒப்புக் கொடுக்கப்படவுள்ளது. (6-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 4

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 757





"உங்கள் திருநாரையூர் நம்பியைத் திருநாராயணபுரத்து அனந்த பட்டரிடம் வந்து வாதமிடச் சொல்லுங்கள்! அங்கே நானும் ஒரு வேளை இருந்தாலும் இருப்பேன்!" என்று கூறினான் ஆழ்வார்க்கடியான்.

பலமுறை அவன் "நாவலோ நாவல்!" என்று கூவியும் யாரும் புதிதாக வாதமிட வரவில்லை. எனவே, நாவல் கிளையை எடுத்துவிட்டுச் சங்கு சக்கரம் பொறித்த வெற்றிக் கொடியை ஆழ்வார்க்கடியான் நட்டான்.

பக்கத்தில் நின்று எல்லாவற்றையும் பார்த்துக் கொண்டிருந்த வைஷ்ணவர்கள் சிலர் உடனே அருகில் வந்து அவனைத் தூக்கித் தோளில் வைத்துக்கொண்டு,

"நாராயணனே நம் தெய்வம்!

நாமெல்லாரும் துதி செய்வம்!"

என்று பாடிக் கொண்டு கூத்தாடினார்கள். பிறகு அவர்கள், "வீர வைஷ்ணவனே! எங்கள் இல்லத்துக்கு வந்து அமுது செய்து அருள வேண்டும்!" என்று பிரார்த்தித்தார்கள். "அங்ஙனமே ஆகுக!" என்று ஆழ்வார்க்கடியான் கம்பீரமாகக் கூறிவிட்டு வந்தியத்தேவனையும் அழைத்துக் கொண்டு சென்றான். இருவரும் புளியோதரை, திருக்கண்ணமுது, ததி யோன்னம் ஆகியவற்றை வயிறு முட்டும்படி ஒரு கை பார்த்தார்கள். ஆழ்வார்க்கடியான் தான் வாதப்போரில் சம்பாதித்த பொருள்களில் அங்கவஸ்திரமாக அணியக் கூடிய பீதாம்பரம் ஒன்றை மட்டும் வந்தியத்தேவனிடம் கொடுத்துவிட்டு மற்றவற்றை ஸ்ரீ வைஷ்ணவர்களிடம் கொடுத்து அவற்றின் பெறுமானத்துக்குப் பொற்கழஞ்சுகள் பெற்றுக் கொண்டான்.

வைஷ்ணவ சமயத்தின் மேன்மையை நிலைநாட்டிக் கொண்டு வடக்கே ஹரித்வாரம் வரையில் போக வேண்டியிருப்பதால் தனக்குப் பொற்காசுகள் தேவை என்பதாக அவன் தெரிவித்துக் கொண்டான். ஸ்ரீ வைஷ்ணவர்களும் மனமுவந்து பொருட்களின் பெறுமானத்துக்கு அதிகமாகவே பொற்காசுகள் கொடுத்தார்கள். பெற்றுக் கொண்டு ஆழ்வார்க்கடியானும் வந்தியத்தேவனும் பிற்பகலில் கடம்பூரை நோக்கிப் பிரயாணமானார்கள்.

கொள்ளிடத்தில் அப்போது பெருவெள்ளம் போய்க் கொண்டிருந்தபடியால் அவர்கள் ஏறிவந்த குதிரைகளைக் கொண்டு வரமுடியவில்லை. அவர்கள் நதியைக் கடந்த ஓடத்தில் ஜனங்கள் அதிகமாக ஏறியிருந்தபடியால், படகு கரையை அடையும் சமயத்தில் கவிழ்ந்துவிட்டது. மற்றவர்களைப் போல் வந்தியத்தேவனும் ஆற்று வெள்ளத்தில் விழுந்து நீந்திக் கரை சேர வேண்டியதாயிற்று. அச்சமயம் அத்தனை காலமாக எத்தனையோ நெருக்கடியான நிகழ்ச்சிகளிலும் வந்தியத்தேவன் காப்பாற்றிக் கொண்டு வந்த அவனுடைய அரைக்கச்சச் சுருளும் அதில் அவன் பத்திரப்படுத்தி வைத்திருந்த இலச்சினைகளும், இளையபிராட்டி தந்த ஓலையுங்கூட நதி வெள்ளத்தில் போய்விட்டன. அவற்றுடன் இருந்த பொன் நாணயங்களும் போய் விட்டன. புதிய குதிரைகள் வாங்குவதற்குப் பணம் சேகரிப்பதற்காகவே மேற்கூறிய யுக்தியை அவர்கள் கையாண்டார்கள். யுக்தி பலித்துக் கொஞ்சம் பணமும் கிடைத்தது. ஆனால் அந்த கிராமாந்தரப் பகுதிகளில் குதிரை எங்கும் விலைக்குக் கிடைக்காது என்றும் தெரிந்தது.

(தொடரும்...)



# சிறுவர் அரங்கம்

## கால் முளைத்த மீன்கள்



கடலுக்குச் சென்று மீன் பிடிக்க வேண்டும் என்ற ஆசை மட்டிக்கு ஏற்பட்டது. தன் விருப்பத்தைக் குருவிடம் தெரிவித்தான். அதைக் கேட்ட மடையன், "குருவே! பகலில் போனால், பெரிய பெரிய அலைகள் நம்மைச் சாகடித்து விடும். அதனால் ராத்திரியில் தான் போக வேண்டும்" என்றான்.

ஆமாம் குருவே! அப்போது தான் கடல் தூங்கிக் கொண்டு இருக்கும்! என்றான் மண்டு. ஒரே இருட்டாக இருக்குமே? என்ன செய்வது?" எனக் கேட்டான் மூடன்.

என் கையில் தான் கொள்ளிக்கட்டை இருக்கிறதே!" என்றான், முட்டாள்.

கடல் என்றதுமே பரமார்த்தருக்குப் பயமாக இருந்தது. இருந்தாலும், சீடர்கள் தன்னைக் கோழை என்று நினைத்து விடக்கூடாது என்பதால் சம்மதம் தெரிவித்தார்.

சீடர்கள் மகிழ்ச்சியோடு ஆளுக்கு ஒரு தூண்டில் தயார் செய்தனர். இரவு வந்தது. குருவும் சீடர்களும் கொள்ளிக்கட்டை வெளிச்சத்தில் மீன் பிடிக்கப் புறப்பட்டார்கள். கடற்கரை ஓரத்தில் படகு ஒன்று இருந்தது. அதில் பரமார்த்தரும் அவரது ஐந்து சீடர்களும் ஏறிக் கொண்டனர். மட்டியும் மடையனும் துடுப்புப் போட்டனர்.

மூடன் தூண்டிலைப் போட்டான். அவன் போட்ட தூண்டிலில் தவளை ஒன்று மாட்டியது. அதைக் கண்ட சீடர்கள், "இதென்ன? விசித்திரமாக இருக்கிறதே என்று கேட்டனர்.

அது தவளை என்பதை மறந்த பரமார்த்தர் இதுவும் ஒரு வகை மீன்தான் அதிகமாக தின்று கொழுத்து விட்டால் இப்படிக் கால்கள் முளைத்து விடும்" என்று விளக்கம் கூறினார்.

"அப்படியானால் கால் முளைத்த மீன்களைக் கட்டிப் போட்டு. வீட்டிலேயே வளர்க்கலாம்" என்றான் மட்டி அதற்குப் பிறகு, மண்டு போட்ட தூண்டிலில் ஒரு சிறிய மீன் மட்டுமே மாட்டியது.

"குருநாதா! எனக்கு ஒரு யோசனை தோன்றுகிறது. படகிற்கு வெளியே நிறைய மீன்கள் இருந்தாலும் கொஞ்சம் தான் நமக்குக் கிடைக்கின்றன. அதனால் படகில் சில ஓட்டைகளைப் போட்டு, பக்கத்தில் கொஞ்சம் பூச்சிகளை வைத்து விடுவோம்! அந்தப் பூச்சிகளைத் தின்பதற்காக, மீன்கள் ஓட்டை வழியாகப் படகுக்குள் வரும்.

உடனே லபக் என்று பிடித்துக் கொள்ளலாம்" என்றான் முட்டாள். சபாஷ் சரியான யோசனை" என்று முட்டாளைப் பாராட்டினார் பரமார்த்தர்.

அவன் யோசனைப் படி படகிலிருந்த ஆணிகளால், ஆளுக்கு ஒரு ஓட்டை போட்டனர்.

அவ்வளவு தான்! அப்போதே கடல் நீர் குபுகுபு என்று படகுக்குள் பாய்ந்து வந்தது.

(தொடரும்...)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அன்பே மகிழ்ச்சியின் வாயிலைத் திறக்கும் சாவியாகும்! – அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

# சமாதானத்தை நேசித்த புனித பாப்பரசர் பிரான்ஸிஸ்

புனித பாப்பரசர் பிரான்ஸிஸ் அவர்கள் கடந்த 21ஆம் திகதி இயற்கை எய்தினார் என்ற செய்தி மனிதநேயமுள்ள எவரையும் கலங்கச் செய்யும்.

ஆம், கத்தோலிக்க மக்களின் திருத்தந்தையாகிய பிரான்ஸிஸ் கத்தோலிக்கத் திருச்சபையின் நடைமுறைகளினின்றும் தன்னை எளிமைப்படுத்தியவர்.

உலகில் சமாதானம் ஏற்பட வேண்டும் என்ற ஒரே நினைப்பில் வாழ்ந்த பாப்பரசர், கொடிய யுத்தங்களால் அருமந்த மனித உயிர்கள் காவு கொள்ளப்படுவது கண்டு மனம் வருந்தினார்.

ஒருமுறை பாப்பரசர் பிரான்ஸிஸைச் சந்திப்பதற்காக தெற்குச் சூடான் அதிபர் சல்வாகீர் மயார்டிட் சென்றிருந்தார்.

அந்த நேரம் தெற்குச் சூடான், உள்நாட்டுக் கலவரத்தால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டிருந்தது.

ஏகப்பட்ட மக்கள் அந்த உள்நாட்டுப் போருக்கு இரையாகியிருந்தனர்.

தென்சூடானில் பல்லாயிரக்கணக்கான மக்கள் உயிரிழந்தமையால் மிகவும் நொந்து போயிருந்த பாப்பரசர் பிரான்ஸிஸ்; தென் சூடான் அதிபரின் காலில் விழுந்து உள்நாட்டு யுத்தத்தை முடிவுறுத்தி மக்களைப் பாதுகாக்குமாறு மன்றாடினார்.

பாப்பரசரின் இச்செயல் கண்டு உலகமே அழுதது.

புனித பாப்பரசரின் காலைத் தொட்டு வணங்குவதற்காகக் கோடிக்கணக்கான மக்கள் காத்திருக்க, இங்கோ திருத்தந்தை பிரான்ஸிஸ் தென்சூடான் நாட்டு அதிபரின் காலில் விழுந்தார் எனில், அப்பாவி மக்கள் மீது புனித பாப்பரசர் கொண்டிருந்த அன்பு எத்துணை அளப்பரியதென்பதைப் புரிந்து கொள்வதில் கடினமிருக்க முடியாது.

உண்மை. நாடுகளுக்கிடையேயான யுத்தங்களும் உள்நாட்டுப் போர்களும் நிரபராதிகளான அப்பாவி மக்களைக் கொலை செய்கின்றன.

வாழவேண்டிய மக்களைக் கொன்றொழிக்கின்ற கொடுஞ் செயலை எப்படியேனும் தடுத்து நிறுத்த வேண்டும் என்ற ஒரே நோக்கிலேயே புனித பாப்பரசர் தென்சூடான் ஜனாதிபதியின் காலைத் தொட்டு கொடிய யுத்தத்தை நிறுத்துங்கள் என்றார்.

ஆம், இதையும் கடந்து உயிர்த்த ஞாயிறு தினத்தில் பங்கேற்ற புனித பாப்பரசர் பிரான்ஸிஸ்; காசா போரை நிறுத்துங்கள், பாதிக்கப்பட்ட மக்களுக்கு உதவுங்கள் எனக் கோரினார்.

அவரின் இறுதி உரையும் அதுவாகவே இருந்தது.

ஆம், இயேசு பிரான் உயிர்த்தெழுந்த புனித நாளோடு திருத்தந்தை வானுறைந்தார்.

கொடிய யுத்தத்தை நிறுத்தி மனித உயிர்களைக் காப்பாற்றுங்கள் என்ற கோரிக்கையைத் தனது இறுதி மூச்சுவரை விடுத்த திருத்தந்தையின் உடல் இன்று(26) அடக்கம் செய்யப்பட்டாலும் அவர் நேசித்த சமாதானம் இந்த உலகில் மலர்ந்து நிலைக்க அனைவரும் பாடுபடுவோம். பிரார்த்திப்போமாக.

# சிறந்த ஒரு சமூகத்தை சட்டத்தின் மூலம் மட்டும் கட்டியெழுப்ப முடியாது

## ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க

(தம்புள்ள)

சிறந்த ஒரு சமூகத்தை சட்டத்தின் மூலம் மாத்திரம் கட்டியெழுப்ப முடியாது என ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

வரலாற்றுச் சிறப்பு மிக்க ரங்கிரி தம்புள்ள ரஜமகா விஹாரையில் நேற்று (25) பிற்பகல் தங்கவேலிகளுடன் கூடிய போதியை திறந்து வைக்கும் நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

உலகில் எந்தவொரு நாடும் தனது கலாசார விழுமியங்களையும் கடந்த கால மரபுகளையும் மறந்து முன்னேற்றத்தை நோக்கி நகர்ந்ததில்லை.

தற்போதைய அரசாங்கம் நாட்டில் இழந்து வரும் விழுமியங்கள் மற்றும் ஒழுக்க நெறிகளை மீண்டும் நிலைநிறுத்தி நாட்டைக் கட்டியெழுப்பி வருவதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார்.

சட்டத்தின் மூலம் மாத்திரம் ஒரு சிறந்த சமூகத்தைக் கட்டியெழுப்ப முடியாது என்று தெரிவித்த ஜனாதிபதி, அங்கு மதத் தத்துவத்திற்கு ஒரு பாரிய சமூக வகிபாகம் இருக்கின்றது என்று சுட்டிக் காட்டினார்.

கிராமத்தின் விகாராதிபதி உள்ளிட்ட மதத் தலைவர்களுக்கு அந்தப் பணியில் முதன்மையான பொறுப்பு உள்ளது என்றும் குறிப்பிட்டார்.

நாட்டிற்குத் தேவையான பொருளாதார, சமூக மற்றும் அரசியல் மாற்றத்தில் அறிவார்ந்த மற்றும் நல்லொழுக்கத்தால் போசிக்கப்பட்ட எதிர்காலத் தலைமுறையை உருவாக்குவதற்காக கல்வித்துறையில் விரிவான மாற்றத்தை அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

அதேபோன்று எதிர்காலச் சந்ததியினரைப் போதைப்பொருட்களிலிருந்து காப்பாற்றுவதற்காகத் திட்டமிட்ட வகையில் செயற்படும் போதைப் பொருள் வியாபாரத்தைத் தடுக்க அரசாங்கம் நடவடிக்கைகளை எடுத்து வருவதாகவும் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தெரிவித்தார். (ம-4)

# அமெரிக்காவின் வரி விதிப்பு அரசாங்கம் வெளியிட்ட அறிக்கை

(கொழும்பு)

தீர்வை வரி விதிப்பு குறித்து அமெரிக்க வர்த்தக முகவர் அலுவலகத்துடன் வொஷிங்டன் டிசியில் நடைபெற்ற கலந்துரையாடல் தொடர்பில் அரசாங்கம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

குறித்த அறிக்கை பின்வருமாறு,

இலங்கைத் தூதுக்குழு வொஷிங்டன் டிசியில் அமெரிக்க வர்த்தக முகவர் அலுவலகத்தின் தூதுவர் ஜேமிசன் கிரீயரை ஏப்ரல் 22 சந்தித்து கலந்துரையாடியது.

அதன்போது, அமெரிக்க வர்த்தக முகவர் அலுவலகத்தின் தூதுவர் ஜேமிசன் கிரீயருக்கு அனுப்பப்பட்ட கடிதங்களின் முதல் பிரதிகள் நிதியமைச்சர் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவின் அறிவுறுத்தலுக்கமைய இலங்கை பிரதிநிதிகளால் அவரிடம் ஒப்படைக்கப்பட்டன.

கடந்த காலங்களில் முகம்கொடுத்த சவால்கள் மற்றும் எதிர்காலத்தில் முகம்கொடுக்கக் கூடிய சவால்களை வெற்றிகொள்ளவும் பொருளாதாரத்தை மீண்டும்முழுமையாக வழமை நிலைக்குத் திருப்பவும் இலங்கை அரசாங்கம் மேற்கொண்டிருக்கும் நடவடிக்கைகள் தொடர்பில் தூதுக்குழுவினரால் தூதுவர் கிரீயருக்கு விளக்கமளிக்கப்பட்டது.

வர்த்தகப் பற்றாக்குறை தொடர்பாகவும், தீர்வை வரி மற்றும் தீர்வை அற்ற தடைகளை மட்டுப்படுத்த அமெரிக்காவுடன் செயலாற்ற இலங்கை கொண்டிருக்கும் துரித மற்றும் முன்னேற்றகரமான அர்ப்பணிப்பு குறித்தும் இலங்கை தூதுக்குழு இதன்போது தெளிவுபடுத்தியது.

இந்தப் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்க இலங்கை முன்வைத்திருக்கும் முன்மொழிவுகளை வரவேற்ற தூதுவர் கிரீயர் இரு நாடுகளுக்கும் இடையில் பக்கச்சார்பற்ற மற்றும் நியாயமான வர்த்தக தொடர்பை உறுதிப்படுத்த விரைவில் ஒப்பந்தம் ஒன்றை செய்துகொள்ள முடியுமெனவும் நம்பிக்கை தெரிவித்தார். (ம-4)

# வாக்காளர் அட்டைகள் நாளை விசேட தபால் சேவை ஊடாக விநியோகம்

உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் நாளை ஞாயிற்றுக்கிழமை (27) விசேட தபால் சேவை ஊடாக விநியோகிக்கப்படும்.

வாக்காளர் அட்டை விநியோகப் பணிகள் எதிர் வரும் செவ்வாய்க் கிழமையுடன் நிறைவடையும் எனத் தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது.

உள்ளூர் அதிகார சபைகளுக்கான தேர்தலுக்கான உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை விநியோகிக்கும் பணிகள் கடந்த 16ஆம் திகதி ஆரம்பமானது. கடந்த 20 ஆம் திகதி (ஞாயிற்றுக் கிழமை) விசேட வாக்காளர் அட்டை விநியோக சேவை இடம்பெற்றது.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகள் ஞாயிற்றுக்கிழமை (27) எதிர் வரும் செவ்வாய்க் கிழமை (29) தினத்தன்றும் இறுதியாக விநியோகிக்கப்படும்.

2025.04.29 ஆம் திகதிக்கு முன்னர் வாக்காளர் அட்டைகள் கிடைக்கப்பெறாதவர்கள் 2024 உள்ளூர் அதிகார சபைகள் தேர்தலுக்காக தேருநர் இடாப்பில் தாம் பதிவு செய்து கொண்ட முகவரிக்குரிய தபால் நிலையத்துக்குச் சென்று தமது ஆளடையாளத்தை உறுதிப்படுத்தியதன் பின்னர் உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டைகளை பெற்றுக்கொள்ள முடியும்.

உத்தியோகபூர்வ வாக்காளர் அட்டையை கைவசம் வைத்திருப்பது வாக்கெடுப்பு நிலையத்தில் வாக்காளரை அடையாளம் காண்பதற்கு வசதியானதாக அமையுமென்று தேர்தல்கள் ஆணைக்குழு அறிவித்துள்ளது. (ம-4)

# மட்டக்களப்பு கிரான் குளத்தில் மயங்கி வீழ்ந்த மாணவி உயிரிழப்பு

(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு கிரான் குளம் பாடசாலை ஒன்றில் வகுப்பறையில் மாணவி ஒருவர் மயங்கி வீழ்ந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குக் கொண்டு சென்ற நிலையில் உயிரிழந்த சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் இடம்பெற்றுள்ளதாகக் களுவாஞ்சிக்குடி பொலிஸார் தெரிவித்தனர்.

கிரான்குளம் 8 ஆம் பிரிவு அமரசிங்க வீதியைச் சேர்ந்த க.பொ.த சாதாரண தரத்தில் கல்வி கற்றுவரும் 16 வயதுடைய மாணவியே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

குறித்த மாணவி வழமைபோல சம்பவதினமான நேற்று பாடசாலைக்குச் சென்று கற்றல் நடவடிக்கையில் ஈடுபட்டு வந்து நிலையில் வகுப்பறையில் திடீரென மயங்கி வீழ்ந்துள்ளார்.

இதனையடுத்து மாணவியை செட்டிப்பாளையம் பிரதேச வைத்தியசாலைக்குக் கொண்டு சென்று அங்கிருந்து களுவாஞ்சிக்குடி ஆதார வைத்தியசாலைக்குக் மாற்றப்பட்ட நிலையில் உயிரிழந்துள்ளார். (ம-4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘விசுவாவசு வருஷ’ புத்தாண்டு பலன்கள்

## நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து காரியமாற்றும் மீன ராசி நேயர்களே!



**கிரகநிலை** - இராசியில் ராகு, சுக்கிரன்(வ), புதன் - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சூரியன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் குரு - பஞ்சம ஸ்தானத்தில் செவ்வாய் - களத்திர ஸ்தானத்தில் கேது - அஷ்டம ஸ்தானத்தில் சந்திரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சனி என வலம் வருகிறார்கள்

**கிரகமாற்றங்கள்:** 26-04-2025 அன்று ராகு பகவான் இராசியில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார் : 26-04-2025 அன்று கேது பகவான் களத்திர ஸ்தானத்தில் இருந்து ரண ருண ரோக ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

02-07-2025 அன்று சனி பகவான் வக்கிர நிலை ஆரம்பம் : 17-11-2025 அன்று சனி பகவான் வக்கிர நிவர்த்தி அடைகிறார் : 06-03-2026 அன்று சனி பகவான் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 11-05-2025 அன்று குரு பகவான் தைரிய வீரிய ஸ்தானத்தில் இருந்து சுகஸ்தானத்திற்கு மாறுகிறார் : 08-10-2025 அன்று குரு பகவான் சுகஸ்தானத்தில் இருந்து பஞ்சம ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

18-11-2025 அன்று குரு பகவான் வக்கிரம் ஆரம்பம் ; 21-12-2025 அன்று வக்கிர நிலையில் இருக்கும் குரு பகவான் பஞ்சம ஸ்தானத்தில் இருந்து சுக ஸ்தானத்திற்கு மாறுகிறார் : 17-03-2026 அன்று குரு பகவான் வக்கிர நிவர்த்தி.

**பலன்கள்:** தனது வாழ்க்கையை தனக்கு மட்டுமல்லாமல் மற்றவருக்கும் பயன்படுமாறு வாழும் மீன இராசி நேயர்களே! இந்த ஆண்டு மனதில் தோன்றும் எண்ணங்களைத் தெளிவாக வெளிப்படுத்துவீர்கள். நெருக்கடியான சமயங்களில் மதிநுட்பத்தால் நிலைமைகளை சமாளித்துவிடுவீர்கள்.

பொருளாதாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்குமென்றாலும் அவ்வப்போது சிறுசிறு நஷ்டங்களும் ஏற்பட்டுக் கொண்டே இருக்கும். போட்டி, பந்தயம், ஸ்பெகுலேஷன் துறைகளில் வெற்றி கிடைக்கும். நல்லவர்கள் பக்கபலமாக இருப்பார்கள்.

அவர்களால் சில முக்கியமான எண்ணங்கள் நிறைவேறும். அரசியல் ஈடுபாடு ஆக்கம் தரும். மின்னுவதெல்லாம் பொன்னல்ல என்கிற பழமொழிக்கு ஏற்ப நன்மை தீமைகளைப் பகுத்தறிந்து காரியமாற்றுவீர்கள்.

உங்கள் பேச்சுத் திறனால் மற்றவர்களைக் கவருவீர்கள். குழந்தைகள் வழியில் முன்னேற்றங்கள் உண்டாகும். தேக ஆரோக்கியம் சிறப்பாக அமையும். இந்த காலகட்டத்தில் காணாமல் போன பொருட்களும் திரும்பக் கிடைக்கும். உங்களின் ஆன்மிக உணர்வு மிகுதியாகவே இருக்கும். நீங்கள் எடுக்கும் எல்லா முயற்சிகளிலும் வெற்றி பெறுவீர்கள். சமூகத்தில் நல்ல மதிப்பும் மரியாதையும் கிடைக்கும்.

பொதுக்காரியங்களிலும் உங்களை ஈடுபடுத்திக் கொள்வீர்கள். வாங்கிய கடன்களையும் தவணை தவறாமல் திருப்பிச் செலுத்துவீர்கள். உங்களுக்குக் கீழ் வேலை செய்பவர்களுக்கு உழைப்புக்கேற்ற ஊதியத்தைக் கொடுப்பீர்கள். வாழ்க்கையில் இருந்த வெறுப்புகள் மறைந்து சிறப்பான பிடிப்புகள் உண்டாகும் காலகட்டமிது என்றால் மிகையாகாது.

**உத்தியோகஸ்தர்கள்:** அலுவலக வேலையில் இருந்த பிரச்சினைகள் படிப்படியாகக் குறையும். திட்டமிட்ட வேலைகளில் சில இடையூறுகள் தோன்றினாலும் விரைவில் அவை விலகி பதவி உயர்வு கிடைக்கும்.

பயணங்களால் பண வரவைக் காண்பீர்கள். மேலதிகாரிகளின் ஆதரவு தொடர்ந்து கிடைக்கும். சக ஊழியர்களால் ஏற்படும் இடையூறுகளை சாதுர்யமாக முறியடிப்பீர்கள். விரும்பிய இடமாற்றங்களும் கிடைக்கும்.

**வியாபாரிகள்:** கொடுக்கல் வாங்கல் விடயங்கள் நன்றாகவே முடிவடையும். போட்டிகளால் பெரிய பாதிப்பு எதுவும் ஏற்படாது. பழைய எதிரிகளின் மீது ஒரு கண் இருக்கட்டும். பழைய கடன்கள் வசூலாகும். புதிய யுக்திகளைப் புகுத்தி வாடிக்கையாளர்களைக் கவருவீர்கள்.




**அரசியல்வாதிகள்:** சமுதாயத்தில் புகழும் அந்தஸ்தும் உயரும். மேலிடத்தின் ஆதரவைப் பெறுவீர்கள். தொண்டர்களின் ஆதரவுடன் எண்ணங்களை பூர்த்தி செய்வீர்கள். கட்சியில் அந்தஸ்தான பதவிகளைப் பெறுவீர்கள்.

**கலைத்துறையினர்:** பணப்புழக்கம் நன்றாக இருக்கும். உயர்ந்தவர்களைச் சந்தித்து உற்சாகம் அடைவீர்கள். புதிய படைப்புகளைத் தயாரிப்பதில் கவனம் செலுத்துவீர்கள். பயணங்களால் நன்மைகளை அடைவீர்கள். செயல்கள் அனைத்தும் வெற்றியைத் தேடித் தரும்.

**பெண்கள்:** கணவரின் ஆதரவுடன் புதிய பொருட்களை வாங்குவர். குடும்பத்தில் மகிழ்ச்சியைக் காண்பர். கணவருடன் அன்போடு பழகுவர்.

**மாணவர்கள்:** முயற்சிக்குத் தகுந்தவாறு மதிப்பெண்களைப் பெறுவர். பாடங்களைப் பிறகு படித்துக் கொள்ளலாம் என்று நினைக்காமல் உடனுக்குடன் மனப் பாடம் செய்யவும். விளையாட்டிலும் வெற்றி கிடைக்கும்.

**பூரட்டாதி 4 ஆம் பாதம்:** இந்த ஆண்டு நண்பர்கள் இடையே அன்னியோன்னியம் அதிகரிக்கும். அவர்களால் உதவிகள் பெறலாம். சுபநிகழ்ச்சிகளுக்கு இப்போது திட்டமிடலாம். வெகுநாட்களாக தடைப்பட்டு வந்த திருமணத்திற்கு உண்டான முயற்சிகளை இப்போது தொடங்கலாம்.

**உத்திரட்டாதி:** இந்த ஆண்டு புதிய வீடு கட்டுவதற்கான வேலைகளை இப்போது தொடங்கலாம். வசதியான வீட்டிற்கு குடிபுகவும் வாய்ப்புண்டு. புதிய ஆபரணங்கள் வாங்கலாம். விருந்து விழா என உல்லாசமாக பயணம் மேற் கொள்வீர்கள். சந்தாணபாக்கியம் ஏற்படும்.

**ரேவதி:** இந்த ஆண்டு பிள்ளைகளால் பெருமை கிடைக்கும். உத்தியோகம் பார்ப்பவர்களுக்கு நல்ல வளர்ச்சியைக் காணலாம். உங்கள் முன்னேற்றத்திற்கு தடையாக இருந்தவர்கள் விலகுவார்கள்.

**பரிகாரம்:** வியாழன் தோறும் அருகிலிருக்கும் சிவன் கோவிலுக்குச் சென்று நவக்கிரகங்களை வலம் வந்து வணங்கி வரவும். தினமும் முன்னோர்களை வணங்கவும். காக்கைக்கு அன்னமிடவும். ஏழை எளியோர்க்கு உதவவும்.

வியாழக்கிழமை தோறும் உங்களால் முடிந்த அளவு அறுகம்புல்லை மாலையாகக் கட்டி விநாயகருக்கு சாத்தவும். முடிந்தவர்கள் தேங்காய் மாலை சாத்தலாம். மேற்கு, வடக்கு ஆகிய திசைகள் அனுகூலமாக இருக்கும். சந்திரன் - குரு - சுக்கிரனால் எதை ஆரம்பித்தாலும் வெற்றிதான்.

(முற்றும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## 5ஆவது...

யின் பொருளாதார மறுசீரமைப்பு விடயங்களை ஆராய்ந்து இந்தத் தீர்மானத்தை எடுத்துள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்தது.

பொருளாதார இலக்குகளை அடைவதற்கான இலங்கையின் முயற்சிகளை சர்வதேச நாணய நிதியம் பாராட்டியுள்ளது. (ம-4)

## ஜனாதிபதியின்...

தரவுள்ள நிலையில் அங்கு பல ஆயிரக்கணக்கான மக்கள் வருகை தரவுள்ளனர்.

இதன்போது காணாமல் ஆக்கப்பட்டோரின் உறவுகள் சங்கப் பிரதிநிதிகளால் ஆர்ப்பாட்டம் மேற்கொள்ளத் திட்டமிட்டுள்ளதாகவும், அவ்வாறு ஆர்ப்பாட்டம் இடம்பெற்றால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் எனவும் தெரிவித்து குறித்த ஆர்ப்பாட்டத்திற்குத் தடையுத்தரவு பிறப்பிக்குமாறு பொலிஸாரால் வவுனியா நீதிமன்றத்தில் கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

இதனைக் கவனத்தில் எடுத்த மன்று, அமைதியான முறையில் ஆர்ப்பாட்டம் செய்வது மக்களின் ஜனநாயக உரிமை. அதனைத் தடுக்க முடியாது. ஆனால் அமைதிக்குப் பங்கம் ஏற்படும் வகையில் யாராவது செயற்பட்டால் பொலிஸார் உரிய நடவடிக்கையை மேற்கொள்ள முடியும் எனவும் தெரிவித்து தடையுத்தரவு கோரிக்கையை மன்று நிராகரித்திருந்தது. (ம-4,250)

## தொலைபேசியில்...

திர மோடியுடன் நேற்று வெள்ளிக்கிழமை பிற்பகல் தொலைபேசியில் தொடர்பு கொண்டு ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இரு நாட்டுத் தலைவர்களும் சுமார் பதினைந்து நிமிடங்கள் தொலைபேசியில் உரையாடினர்.

இந்தப் பயங்கரவாதத் தாக்குதல் குறித்து தான் மிகவும் அதிர்ச்சியடைந்ததாகக் கூறிய ஜனாதிபதி, இந்திய மக்களுடன் இலங்கை எப்போதும் சகோதரத்துவத்துடன் பிணைந்துள்ளது என்றார்.

உலகில் எங்கு இடம்பெற்றாலும், பயங்கரவாதத்தை தான் வன்மையாகக் கண்டிப்பதாக ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க வலியுறுத்தினார்.

இந்தக் கொடூரமான பயங்கரவாதத் தாக்குதலில் உயிரிழந்தவர்களுக்கும் அவர்களது குடும்பத்தினருக்கும் இலங்கை அரசாங்கம் மற்றும் மக்களின் இரங்கலைத் தெரிவித்துக் கொண்ட ஜனாதிபதி, காயமடைந்தவர்கள் விரைவில் குணமடையவும் பிரார்த்தித்தார்.

மேலும் எழுந்துள்ள நிலைமையால் ஏற்பட்டுள்ள பதற்றமான சூழ்நிலை விரைவில் தீர்க்கப்பட்டு பிராந்திய அமைதி நிலைநாட்டப்படும் என்பது இலங்கையின் எதிர்பார்ப்பாகும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார். (ம-4)

## குற்ற விசா...

வந்தன. இதனால், இணையக் குற்றங்கள் தொடர்பான முறைப்பாடுகளை முன்வைப்பதற்காகக் கொழும்புக்குச் செல்லவேண்டிய தேவை ஏற்பட்டிருந்தது.

எனவே, இந்த விடயம் தொடர்பில் பொலிஸாரால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கு அமையவே, யாழ்ப்பாணத்தில் இணையக் குற்றவிசாரணைப் பிரிவு ஆரம்பித்து வைக்கப்பட்டது. (ம-4,33)

## 20 கிலோ...

சந்தேகத்தின் அடிப்படையில் வீட்டு உரிமையாளரான பெண்ணே கைது செய்யப்பட்டுள்ளார்.

சந்தேக நபரை இன்றைய தினம் நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ம-4,316)

## கொள்ளையர்கள்...

பிரேமதாஸ இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து தெரிவிக்கையில், சுப நேரத்தில் நாட்டை அநுரவுக்கு கொடுத்து, வளமான நாட்டையும், அழகான வாழ்க்கையையும் மக்கள் எதிர்பார்த்தனர். ஆனால் ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்க தலைமையிலான அரசாங்கம் வாக்குறுதியளித்த வளமான நாடும், அழகான வாழ்வும் இன்று இல்லை. குண்டர்கள், கொள்ளையர்கள் மற்றும் கொலைகாரர்களின் பிடியில் சமூகம் சிக்கியுள்ளது. [illegible] முறையும் [illegible] என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

தேசியப் பாதுகாப்புக் குறித்து ரியூஷன் வகுப்புகள் எடுக்கிறோம் வாருங்கள் எனக் கூறி பெருமையடித்த இந்த அரசு, இன்று பாதுகாப்பு குறித்து ரியூஷன் வகுப்புக்குச் செல்ல வேண்டிய நிலைக்கு வந்துள்ளது. சமகாலத்தில் பல துப்பாக்கிச் சூட்டுச் சம்பவங்கள், கொலைகள், உயிரிழப்புகள் இடம்பெற்றுள்ளன. வீடுகள், வீதிகள், பணியிடங்கள் பாதுகாப்பற்றுக் காணப்படுகின்றன என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

இன்று பொதுமக்களுக்குப் பாதுகாப்பு இல்லை. வளமான நாடு அழகான வாழ்க்கை என்ற கொள்கைப் பத்திரம் வாக்குறுதிகளை மீறும் நாடகமாக மாறியுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

பொருட்களின் விலைகள், எரிபொருள் விலைகள், மின்சாரக் கட்டணம், VAT மற்றும் பிற வரிகளைக் குறைப்பதாக வாக்குறுதி வழங்கினர். அந்த வாக்குறுதிகள் இன்னும் சரியாக நிறைவேற்றப்படவில்லை. இந்த ஆளுந்தரப்பினர் ஒலிவாங்கியை எடுத்துக் கொண்டு பச்சைப் பொய்களை கூறி மக்களை ஏமாற்றி, அவஸ்தைப் படுத்தி வருகின்றனர்.

வரவு செலவு திட்டத்தில் கூட இல்லாத விடயங்களைக் கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். பொய்களைக் கூறி நாட்டை ஏமாற்றும் இந்த கையாலாகாத அரசாங்கத்தை தோற்கடிக்க வேண்டும் என எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார். (ம-4)

## பாப்...

சதுக்கத்தில் இறுதி அஞ்சலி நிகழ்வு இடம்பெறவுள்ளது.

88 வயதான பிரான்ஸிஸ் வத்திக்கானில்உள்ள காசா செண்டா மார்த்தாவில் உள்ள அவரது இல்லத்தில்கடந்த 21ஆம் திகதி உயிரிழந்தார்.

திருத்தந்தையின் இறுதி ஆராதனை நடைபெறும் இன்றைய தினம் இலங்கையில் தேசியதுக்க தினமாக பிரகடனப்படுத்தப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-4)

## கீரிமலை...

பயன்பாடு குறித்து அடுத்த கட்ட நடவடிக்கையாக விரிவான ஆய்வும் மேற்கொள்ளப்பட்டது.

இந்த விஜயத்தில், நகர அபிவிருத்தி, கட்டுமான மற்றும் வீடமைப்பு அமைச்சர் அநுர கருணாதிலக, கடற்றொழில் மற்றும் நீரியல் வளத் துறை அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர், யாழ்ப்பாணம் மாவட்டத்தை பிரதிநிதித்துவப்படுத்தும் பாராளுமன்ற உறுப்பினர்கள், அமைச்சின் உயர் செயலாளர்கள் மற்றும் துறைசார் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

இக்கட்டடத்தை சமூக மற்றும் அபிவிருத்தி நோக்கில் மக்களுக்கு பயனுள்ள விதத்தில் பயன்படுத்துவது குறித்து பலவேறு யோசனைகள் முன்வைக்கப்பட்டு, விரைவில் திட்டமிடல் நடைமுறைப்படுத்தப்படும் என தெரிவிக்கப்படுகிறது. (ம-4)

---

மஹஜன சம்பத
திகதி 2025.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 5812
W 7 7 3 7 9 1
அத சம்பத
W 3 7 9 1
சீட்டிழுப்பு இலக்கம் 387

தன நிதானய
திகதி - 2025.04.25
சீட்டிழுப்பு இலக்கம் - 1842
I 14 23 26 72 I
Double Chance 09147

மெகா பவர்
திகதி 25/04/2025
சீட்டிழுப்பு இலக்கம் 2160
B 01 04 06 41 42

ஜய
திகதி 2025.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 080
D 3 9 9 4

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 4054
சீட்டிழுப்பு திகதி 25.04.2025
A 05 39 47 56
A

ஹதஹன HANDAHANA
உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 2025.04.25
சீட்டிழுப்பு இலக்கம் 1121
ரிஷபம் 14 19 28 45 ரிஷபம்
64516 23

உத்தியோகபூர்வ முடிவுகள்
சுபிர தன சம்பத
25.04.2025 வெற்றி வாரம் 520
S 1 7 3 4 2 5
99889
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.36,059,264.80

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 2786
சீட்டிழுப்பு திகதி 2025.04.25 தினம் வெள்ளிக்கிழமை
39 40 58 76 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 58,139,825.60

சனிதா
திகதி 25.04.2025 வெற்றி வாரம் 4947
06 28 66 75 X
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 61,521,982.80
59285

சசிரி
வெற்றி வாரம் 669
சீட்டிழுப்பு திகதி 25.04.2025
வெள்ளிக்கிழமை
16 17 22
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. ரூ.200,000.00

ராசி
சீட்டிழுப்பு வாரம் 4498
சீட்டிழுப்பு திகதி 25.04.2025 தினம் வெள்ளிக்கிழமை
14 16 24 59 கடகம்
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.4,658,189.60
152922

கப்ருக
ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம்
M 13 09 32 40 52
1962
25.04.2025 வெள்ளிக்கிழமை
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.572,988,750.80

அட கோடிபதி ADA KOTIPATHI
வெள்ளிக்கிழமை
வெற்றி வாரம் : 2612
சீட்டிழுப்பு திகதி 2025.04.25
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.52,213,364.00
35 38 68 75 E
235183

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கணனி திருத்தம்

**S.T. Antonys Computer**
**Jaffna**

எமது நிறுவனத்திடம் திருத்தத்திற்காக வழங்கப்பட்ட Laptop, Desktop கணனிகளை 24.04.2025 தொடக்கம் எதிர்வரும் 15 நாட்களுக்குள் பெற்றுக்கொள்ளவும். அதன் பின்னர் நாம் பொறுப்பாளிகள் இல்லை என்பதனை அன்பான வாழிக்கையாளர்களுக்கு தெரியப்படுத்துகின்றோம்.

முகாமையாளர்
S.T. Antonys Computer

(C-2805)



## வீடு வாடகைக்கு

யாழ்ப்பாணம், சுண்டிக்குளி, சுவாட்ஸ்லேனில் 5 அறைகளுடன் தனித் தனி குளியலறைகளுடன் கூடிய மேல்தளத்தில் அமைந்த வீடு வாடகைக்கு உண்டு.
(அலுவலக பாவனைக்கு உகந்தது)

**077 148 4540**

(C-2856)


# பாப்பரசர் மறைவுக்கு சஜித் பிரேமதாஸ இரங்கல்



(கொழும்பு)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ நேற்று(25) வத்திக்கான் தூதரகத்திற்குச் சென்று மறைந்த பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸிக்கு இரங்கல் தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள வத்திக்கான் தூதரகத்திற்கு சென்ற எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, இலங்கையின் வத்திக்கான் அப்போஸ்தலிக்க தூதுவர் பேராயர் பிரயன் உடெய்க்வேவை சந்தித்து சிறிது நேரம் உரையாடியதைத் தொடர்ந்து தனது இரங்கலைத் தெரிவித்தார்.

பின்னர் அங்கு வைக்கப்பட்டிருந்த இரங்கல் புத்தகத்தில் குறிப்பு எழுதி, பரிசுத்த பாப்பரசர் பிரான்சிஸ் அவர்களின் மறைவு குறித்து உலகெங்கிலும் உள்ள அனைத்து கிறிஸ்தவர்களுக்கும் தனது ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்தார். (ம-4)


## மணமகள் தேவை

1. இணுவில், இந்து, 1990, அனுசம், Quantity Surveyor, Australia citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
2. சங்கானை, இந்து, 1992, விசாகம், BA(Hons), Accountant, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
3. கோப்பாய், இந்து, 1984, சதயம், MBBS Doctor, Ireland Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
4. பளை, இந்து, 1984, அவிட்டம், Phd, Divorce, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
5. வண்ணார்பண்ணை, இந்து, 1976, MBBS Doctor, Divorce, UK Citizen மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
6. நீர்வேலி, இந்து, 1989, சுவாதி, Phd in chemistry, South Korea மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
7. திருநெல்வேலி, இந்து, 1987, ஆயிலியம், MBBS Doctor மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
8. யாழ், இந்து, 1986, மகம், MSc, UK மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
9. கோப்பாய், இந்து, 1988, பூரட்டாதி, MBA, கனடா மாப்பிள்ளைக்கு பெண் தேவை.
10. மயிலிட்டி, இந்து, 1981, அத்தம், Accountant, USA மாப்பிள்ளைக்கு பெண் தேவை.

(C-2808)

S.Sharma J.P
www.thaalee.com
077 539 3728
077 803 8193



## Village Hotel
**Bus Booking (A/C Bus)**

பருத்தித்துறை → கொழும்பு
யாழ்ப்பாணம் → கொழும்பு

இரு வழிச் சேவை (பகல்/ இரவு)
நெல்லியடி → கொடிகாமம் ஊடாக
www.villagehotel.lk

**077 544 8503**

(3997)



## வேலையாட்கள் தேவை

புத்தூரில் இயங்கும் அரைக்கும் ஆலை ஒன்றிற்கு அனுபவமான வேலை ஆட்கள்(ஆண்) தேவை.

தொடர்புகளுக்கு:
**077 373 5261**

(1067)



## உடனடி வேலை வாய்ப்பு
நிர்வாக உத்தியோகத்தர்



விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள்
**V2 TRAVELS**

எமது கிளைகள்
• கிளிநொச்சி • சுன்னாகம்
• சாவகச்சேரி • மாவிட்டபுரம்
• நெல்லியடி • பருத்தித்துறை
• திருகோணமலை • வல்வெட்டித்துறை
• கோப்பாய் • புத்தூர்
• பண்டத்தரிப்பு • சங்கானை
• கொழும்பு

வயது :-30 வயதிற்குட்பட்டோர் (இருபாலாரும்)
அனுபவமுள்ளவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்
சம்பளம் - 30'000/-
பயிற்சியின்போது - 25'000/-
0777-068-777
v2vacancies@gmail.com

(C-2807)



## விவசாயிகளுக்கு

இந்தியாவில் இருந்து நேரடியாக எம்மால் இறக்குமதி செய்யப்பட்ட Greaves MK12, MK 20 நீர் இறைக்கும் இயந்திரம் (Water Pump) இப்பொழுது எம்மிடம். அத்துடன் இலங்கையில் முதன் முதலாக அறிமுகப்படுத்துகின்றோம். ஒரே என்ஜினிற்கு விரும்பிய எரிபொருளை நீங்களே தெரிவு செய்யலாம்.
(மண்ணெண்ணெய், பெற்றோல், டீசல்)





" நாங்கள் உங்களோடு "
ஆர்க் . என் . கம்பனி
150, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம். 021 222 4021
A9 வீதி, எழுதுமட்டுவாழ். 070 191 3571
A9 வீதி, பரந்தன் சந்தி, பரந்தன். 021 228 2020
Hotline : 071 535 7799/ 071 535 7803

(4022)



## வேலைவாய்ப்பு

**விற்பனைப் பிரதிநிதி (Sales Rep)**
♦ தகைமை : க.பொ.த உயர்தரம்
♦ முன் அனுபவம் விரும்பத்தக்கது.
♦ ஓட்டுனர் உரிமம் (Driving Licence)

**பட்டா றைவர் (Batta Driver)**
♦ சம்பளம் நேரில் பேசித் தீர்மானிக்கப்படும்.
♦ யாழ். நகரிலிருந்து 7 Km தொலைவிற்குள் இருத்தல் வேண்டும்.

(4024)

தொடர்புகளுக்கு:
**077 326 9589**
**077 711 0164**



## செவிப்புலன் கருவிகள் விற்பனைக்கு



செவிப்புலன் குறைபாட்டினால் கவலையா?
கவலை வேண்டாம்.
ரூபா 9999/- மட்டுமே செலுத்தி செவிப்புலன் கருவி ஒன்றினை உங்களுடையதாக்கிக் கொள்ளுங்கள்.
யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, வவுனியா, கிளிநொச்சி, மன்னார் போன்ற அனைத்து இடங்களுக்கும் வீட்டிற்கே வந்து பரிசோதித்து வழங்குகின்றோம்.

முற்பதிவு செய்ய மற்றும் மேலதிக விபரங்களுக்கு அழையுங்கள்
**077 434 6245**

(4027)



## Pearson International College



♦ இலங்கையில் முதன்முறையாக TESL தகைமையுடைய கனடா விரிவுரையாளர்கள் வழங்கும் கனடா அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட IELTS மற்றும் Diploma கற்கை நெறிகள்.
♦ தற்போது O/L எழுதிய மாணவர்களுக்கான Basic English, Dip in English நடைபெறுகின்றது.
♦ கற்பித்தல் உங்களுக்கு திருப்திகரமானதாக இல்லையெனில் 100% money back Guarantee
♦ எம்மிடம் கல்வி கற்று Band 7 க்கு மேல் பெற்ற மாணவர்களின் பெறுபேறுகளை பார்த்து உறுதி செய்யுங்கள்.
♦ இப்போது யாழ்ப்பாணம் மற்றும் வவுனியாவில் வட மாகாணத்தில் No. 1 IELTS Coaching

074 188 7878, 074 385 7584
www.picsl.lk
TESL CANADA
TESL Ontario

(1009)



## காணி வீடு விற்பனைக்குண்டு

யாழ். அளவெட்டி பெரிய சங்கத்தானை சந்தியில் இருந்து 100m தூரத்திலும் A.M.A கல்வி நிலையத்தில் இருந்து 50m தூரத்திலும் நல்ல நீர்க் கிணறு, வருமானங்களும் கிடைக்கக் கூடியதாக உள்ளது. குடியிருப்புச் சூழல்.
காணியின் பரப்பு - 5 பரப்பு

தொடர்புகளுக்கு:
**076 755 8606**
**077 638 5683**



## Happy Supermarket - உரும்பிராய்

| | | |
|---|---|---|
| 1Kg வெள்ளைச் சீனி | - 219/= | Max 10Kg |
| 1Kg Prima கோதுமை மா | - 155/= | |
| 1Kg சிவப்பு பருப்பு | - 258/= | |
| 1Kg மஞ்சள் பருப்பு | - 420/= | |
| 1Kg பொன்னி அரிசி | - 240/= | |
| 1Kg சம்பா அரிசி | - 240/= | Max 2Kg |
| 1Kg ஈக்குத்தீட்டல் (உள்நாடு) | - 217/= | |
| 1Kg கடலை | - 394/= | |
| 1Kg வெள்ளைப்பச்சை(உள்நாடு) | - 215/= | |
| 1Kg தீட்டல் பச்சை | - 245/= | |
| 1Kg அரிசிமா | - 265/= | |
| 1Kg பால் பொன்னி அரிசி | - 265/= | |
| 700g சுபோஷா(திரிபோஷா) | - 570/= | ~~590/=~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 45/= | ~~70/=~~ |
| 01 லங்கா கறிசோயா | - 115/= | ~~140/=~~ |

400g Anchor

1040/= ~~1100/=~~

1Kg சன்லைட் பவுடர்

270/= ~~320/=~~

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். மேலதிக விலைக்கழிவு விபரங்களிற்கு
Facebook:- happy basket.lk இனை நாடவும்

பலாலி வீதி, உரும்பிராய் சந்தி.
Happy Supermarket
0777 8080 30

(1068)


இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 26.04.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org